Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 6: இதழ் 5 ஏப்ரல் 1954 விலை : சதம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப் படம்



இலங்கையின் சிறந்த மரவர்க்கங்களில் நாகமரமும் ஒன்றாகும். கௌதம புத்தர் புத்தபதவியையடைய அரசமரம் எவ்வாறு உதவியதோ அவ்வாறே நாகமரமும் புத்தர்களோடு நெருங்கிய சம்பந்தமுடையதாயிருக்கின்றது. கௌதம புத்தருக்கு முன்னும் 23 புத்தர்கள் இருந்தனரென பௌத்தர்கள் கருதுகின்றனர். இப்புத்தர்களிற் சிலர் நாகமரத்தின் கீழிருந்தே மாரனை வென்றனர் என அறியக்கிடக்கின்றது. இனித் தோன்றப் போகும் மைத்திரி புத்தர் நாகமரத்தின் கீழிருந்து புத்தபதவியடைவாரென்ற ஐதீகம் பௌத்தர்களிடையே பரவியிருப்பதால், இம்மரம் அவர்களின் வழிபாட்டிற்குரிய பொருளாயின்றது. நாகமரம், கருங்காலி, முதிரை, தேக்கு முதலிய மரங்களைப் போன்று உறுதியான மரவகையைச் சேர்ந்த போதிலும் பௌத்தர்கள் நன்றிகாட்டு முகத்தான் இதனை வெட்டி உபயோகிக்கின்றார்களில்லை. சித்திரை, வைகாசி மாதங்களில் நாகை பூக்கும். வைசாக விழாக் காலத்தில் நாகமரங்கள் வெண்கலை விரித்தாலன்ன மலர்களைப் பரப்பி புத்தபெருமானின் புனிதத் தன்மையை எடுத்துக்காட்டும் சின்னங்களாகக் காட்சியளிக்கும். பூத்துக்குலுங்கி புன்னகை காட்டி எம்மை வசிகரிக்கும் நாகமலர் நிரம்பிய கொம்பொன்றை அட்டைப்படம் அலங்கரிக்கின்றது.


# இலங்கை வங்கி

உங்கள் முழுத் தேவைகளுக்கும் உதவும் ஒரு பூரண வங்கிச் சேவை முறையைக் கடைப்பிடிக்கிறது.

| | |
|---|---|
| தலைமைக் காரியாலயம் : | 41, பிரிஸ்டல் வீதி, கொழும்பு. |
| வெளிநாட்டு விவகாரப் பகுதி : | ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு |
| லண்டன் காரியாலயம்: | 468, லட்கேட் ஹில் லண்டன் ஈ. ஸீ. 4. |
| இலங்கைக் கிளைகள் : | கண்டி, காலி, யாழ்ப்பாணம், புறக்கோட்டை, (கொழும்பு) திரிகோணமலை, வதுளை, பாணந்துறை, களுத்துறை, மட்டக்களப்பு, குருநாகல், தலைமன்னார் பாலம் (பணம்கொடுக்கும் கந்தோர்.) |

**உங்களுக்கண்மையில் உங்களுக்குச் சேவை புரிய ஒரு காரியாலயமுண்டு.**





## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இரண்டாவது எலிசபெத் மகாராணியார் வாழ்க்கையிற் சில முக்கிய சம்பவங்கள் .. .. | 4 |
| 2. | பிரித்தானிய அரச குடும்பத்தினரின் இலங்கை விஜயம் .. | 5 |
| 3. | எலிசபெத் மகாராணியின் ஈழநாட்டு விஜயம் .. .. | 7 |
| 4. | மகாராணியார் மீது வாழ்த்துப்பா .. | 7 |
| 5. | ஈழத்தரசிகள் .. .. | 8 |
| 6. | வருஷப் பிறப்பு .. .. | 10 |
| 7. | நானிலம் புகழ் நவரத்தினசாமி .. | 11 |
| 8. | நீச்சல் வீரன் நவரத்தினசாமி .. | 12 |
| 9. | கண்டி தலதா மாளிகை .. | 15 |
| 10. | திருமதி விஜயலட்சுமி பண்டிட் அவர்களின் இலங்கை வருகை .. | 16 |
| 11. | வெளி நாடுகளிலுள்ள இலங்கை ஸ்தானிகராலயங்கள் (2)—அவுஸ்திரேலியா .. .. | 18 |
| 12. | அயல் நாட்டார் கண்ட அழகிய இலங்கை .. .. | 20 |
| 13. | சங்கிலி இராசன் நாடகம் .. | 21 |
| 14. | திரு. அருணாசலம் சபாபதி .. | 23 |
| 15. | கிராமங்களில் கூட்டு வாழ்க்கை .. | 24 |
| 16. | குத்தில காவியம் .. | 28 |


1—J. N. B 34840—5,506 (3/54)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 176



இரண்டாவது எலிசபெத் மகாராணியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது எலிசபெத் மகாராணியார் வாழ்க்கையிற் சில முக்கிய சம்பவங்கள்

1926 ம் ஆண்டிலே வசந்த காலத்திலே ஒரு நாள் அதிகாலையில் லண்டனிலுள்ள ஒரு நகர இல்லத்தில் எலிஸபெத் இளவரசி பிறந்தார். இவ்வில்லம் இவரது பாட்டனரான ஸ்டிருத்மூர் பிரபுவுக்குச் சொந்தமானது. இது காலகதியில் விற்பனைசெய்யப் பட்டு அங்கு இப்பொழுது நவீன காரியாலயங்கள் பல கட்டப் பட்டிருக்கின்றன. எனவே எங்கள் மகாராணி தாம் பிறந்த இல்லத்தை இப்பொழுது போய்ப்பார்க்க முடியாது.

எலிஸபெத் இளவரசி தமது வாழ்நாட்களின் முதல் மூன்று மாதகாலத்தை மட்டுமே லண்டனில் கழித்தார். இக்காலத்தில் ஒரு பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. ஆனல் அது எங்கள் இளவரசியை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. பின்னர் இவர் பக்கிங்ஹாம் அரண்மனை தேவாலயத்தில் ஞானஸ்நானம் பெற்றதும், தம் முன்னேர் விட்டுச்சென்ற அருஞ் செல்வமான ஸ்கொத்திலாந்துக்கு முதன் முதலாக வடக்கு நோக்கிப் பிரயாண மானர்.

ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் இரண்டாவது புத்திரரான யோர்க் கோமகன் கிட்டத்தட்ட தமக்கு விருப்பமான வாழ்க்கை யையே நடத்தினர். ஆனல் வேல்ஸ் கோமகன் பட்டத்துக்குரியவ ராகவிருந்ததால் அவரது வாழ்கைை அரசாங்கத்தாலேயே நிர்ணயிக்கப்பட்டதாகவிருந்தது. யோர்க் கோமகன் குடும்பஸ்தர் ஒருவரின் வாழ்க்கையை மேற்கொண்டு தம் தோட்டங்களைச் கவனித்துக்கொள்வதில் சிரத்தை எடுத்தார்.

ஸ்கொத்திலாந்து மன்னர்களின் வழித்தோன்றலான எலிஸ பெத் பௌஸ்-லியோன் சீமாட்டியை இவர் திருமணஞ்செய் தார். தமது மனைவியாரின் செல்வாக்கைக் கொண்டு இவர் ஸ்கொத்திலாந்து தேசத்து நிலச்சுவான்தார் ஒருவரின் வாழ்க்கையை அதிகமாக மேற்கொள்ளலானர்.

இவர்களது வாழ்க்கை இப்படியாக இருந்ததால் இளவரசி யாரது வாழ்க்கையும் சம்பிரதாயப் பூர்வமானதாகவே நடை பெற்று வந்தது. இவ்வாழ்க்கை இளவரசியாருக்கு அதிக மகிழ்ச்சிதரக்கூடியதாக இருந்திருக்க வேண்டும்.

இளவரசி, தமது தாயாரைப் பராமரித்துவந்த ஸ்கொத்தி லாந்து தேசத்தவரான செவிலித்தாயாரின் பொறுப்பில் விடப் பட்டார்.

1927 ம் ஆண்டில் ஆஸ்திரேலிய பொது நலக்குடியரசின் முதலாவது பாராளுமன்றத்தைப் புதிய தலைநகரான கான்பெரா வில் அங்குரார்ப்பணஞ்செய்து வைக்கத் திட்டமிட்டபோது, ஐந்தாம் ஜோர்ஜ் மன்னருக்குப் பதிலாக சமுகமளிக்குமாறு யோர்க் கோமகனையும் அவரது மனைவியாரையும் ஆஸ்திரேலியா அழைத்தது. எனவே இருவரும் ஆறுமாத காலம் வெளிநாடு சென்றிருந்தார்கள். இக்காலத்தை எலிஸபெத் இளவரசி ஐந் தாம் ஜோர்ஜ் மன்னர் தம்பதிகளான தம் பாட்டன் பாட்டி ஆகியோருடனும் ஸ்டிருத்மூர் பாட்டன் பாட்டியாருடனும் கழித் தார்.

இக்காலத்திற்றன் எலிஸபெத் இளவரசிக்கும் அவரது பாட்டி யாரான மேரி மகாராணியாருக்குமிடையில் உண்மையான அந்நி யோன்னிய தொடர்பு ஏற்பட்டது.

யோர்க் கோமகனும் கோமகளும் நாடு திரும்பியதும் அவர் கள் பிக்காடியிலுள்ள 145 ம் இலக்க இல்லத்திற் குடியேறி னர்கள்.

சகோதரர்களையும் சகோதரிகளையும் பெறுவதே ஒரு குழந் தையின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகளாகும். எனவே கிளாமிஸ் காஸிலில் பிறந்த தனது சகோதரி மார்க றெட்டைப் பார்க்க எலிஸபெத் இளவரசி அதிக ஆவலுடைய வராகவிருந்தார்.

குடும்பஸ்தர் ஒருவரின் சுமைகள் யோர்க் கோமகனுக்குமுன் எப்போதையும்விட அதிகமாகிவிட்டது. எனவே ஒரு வாசஸ் தலத்தைத் தேடும் பிரச்னை அவரையும் அவர் குடும்பத்தையும் எதிர் நோக்கியிருந்தது. . . . . . . . . . . . . வின்ட்சரிலுள்ள அரச குடும்ப வாசஸ்தலம் அவர்களுக்குப் பொருத்தமான தாகக் காணப்பட்டதால் 1931 ல் அவர்கள் அதில் குடியேறி னர்கள். அப்பொழுது எலிஸபெத் இளவரசியாருக்கு வயது ஐந்து.

எலிஸபெத் இளவரசிக்குப் 11 வயதாகும்வரை அவரது கல்வி சாதாரணமானதாகவே யிருந்தது. ஆனல் அவ்விளம் வயதிலும் கூட இவரது பெரிய தகப்பனரான எட்டாவது எட் வேர்ட் மன்னர் பட்டம் துறந்ததால் பொறுப்புகள் இவர்மீது திடீரென சுமத்தப்பட்டன.

தமது இளம் குமாரத்திமீது தமக்கிருந்த நம்பிக்கையே யோர்க் கோமகன் ராஜாங்கப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் படி அவரைத் தூண்டுவதில் ஓரளவிற்குப் பொறுப்பாக இருந்த தென்றும் சொல்லப்படுகிறது. ஆகவே எலிஸபெத் இளவரசி எதிர்பாராத விதமாகவும் திடீரெனவும் முடிக்குரிய இளவரசி யானர். இது அவரது கல்வியிலும் வாழ்க்கையிலும் ஒரு பெரிய மாற்றத்தையுண்டுபண்ணியது.

இரண்டாவது எலிஸபெத் மகாராணியார் தமது வாழ்க்கை யைத் திரும்பிப் பார்ப்பாரானல், 1939 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் உலக யுத்தம் ஆரம்பமான துக்ககரமான தினத்தோடு அது மாற்றமடைந்திருக்கிறதென்பதை அவர் நிச்சயமாகக் காண்பார். யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபோது இளவரசியாருக்கு 13 வயதே நிரம்பியிருந்த தென்பதையும், அது முடிவுற்ற போது அவர் 19 வயதை அடைந்திருந்தாரென்பதையும் நாம் ஞாபகப்படுத்துவோமானல் அவரது வாழ்க்கையை நாம் நன்கு அறிந்துகொள்ளமுடியும்.

அரசாங்க அலுவல்களைக் கவனிப்பதில் மன்னர்பிரான் மும் முரமாக ஈடுபட வேண்டியிருந்தது. மன்னரின் தேகாரோக்கியம் மகாராணியாருக்கும் குறிப்பாக அவரது மூத்த புதல்விக்கும் கவலையளித்துவந்தது. மேலும் அரச குடும்பத்தினரின் நட மாட்டத்தையும் யுத்தம் கட்டுப்படுத்தியது.

இதர பெண் பிள்ளைகளைப்போல் இளவரசியும் யுத்தத்தின் பொருட்டு தாமும் தம் பங்கைச் செய்யவேண்டுமென விரும்பி னர். ஆகவே 1940 ம் ஆண்டு இலையுதிர்காலத்தில், பிரதான மாக ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவில் பிரசாரம் செய்யும் பொருட்டு, இளவரசி ஒலிபரப்ப வேண்டுமென தீர்மானிக்கப் பட்டது.

(9 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய அரச குடும்பத்தினரின் இலங்கை விஜயம்

மாட்சிமைதங்கிய இரண்டாவது எலிஸபெத் மகாராணியும் இராஜோன்னத எடின்பரோ கோமகனும் வசந்தகாலமாகிய சித்திரைத் திங்கள் 10 ம் நாளன்று இலங்கையில் கால் வைக்கின்றார்கள். மணிமகுடம் தரித்த மாதரசி இலங்கைக்கு விஜயஞ்செய்வது இதுவே முதல் தடவையாதலின், இலங்கைச் சரித்திரத்தில் இந்நாள் ஒரு புனித நன்னாளாக இடம்பெறும் என்பதற் கையமில்லை. அரச குடும்பத்தினர் பலர் காலத்துக்குக் காலம் இலங்கைக்கு வந்து மீண்டனர் எனினும், மணிமுடி தரித்த அரசியோ அரசனோ முன்னொரு முறையாவது இலங்கைக்கு வந்ததில்லை. எலிஸபெத் இளவரசி 1952 ம் ஆண்டில் கொழும்புக் காட்சி நடைபெற்றபோது இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவருடைய தந்தையார் ஆறுவது ஜோர்ஜ் மன்னர் காலஞ்சென்றமையால் அவர் இலங்கைக்கு வருவதைப் பின்போட வேண்டி நேரிட்டது. அதுவும் ஒரு வகையில் நன்மையாகவே முடிந்ததெனலாம். 1952 ல் எலிஸபெத் இளவரசியை வரவேற்க எதிர்பார்த்திருந்த இலங்கை மக்கள் இப்பொழுது எலிஸபெத் மகாராணியை வரவேற்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ளார்கள்.

இத்தருணத்தில் இலங்கைக்கு விஜயஞ்செய்த பிரித்தானிய அரசகுடும்பத்தினரை நினைவுகூர்தல் பொருத்தமுடையதாகும். பெரிய பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு முதன் முதல் விஜயஞ்செய்தவர் எடின்பரோ கோமகனாகவிருந்த அல்விரட் இளவரசராவர். இவர் விக்ரோறியா மகாராணியின் இரண்டாவது புதல்வர். இவர் 1870 ல் " கலத்தீ " எனும் கப்பலில் இலங்கை வந்து சேர்ந்தார். அக்காலத்தில் இலங்கைத் தேசாதிபதியாயிருந்த சேர். ஹேர்குலிஸ் றொபின்சன் கோமகனை வரவேற்பதற்குரிய ஒழுங்குகளை இலங்கை மக்களின் ஒத்தாசையுடன் செய்தார். கோமகனார் 1870 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் திகதி கொழும்புத் துறைமுகத்தில் நண்பகலில் வந்திறங்கினார். துறைமுகத்தில் குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது. துறைமுகத்திலிருந்து அவர் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில் இராணி மாளிகைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலம் சென்ற பாதையின் இருமருங்கிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருந்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அடுத்த நாள் கோமகனார் யானை வேட்டை அடைப்பு நிறுவப்பட்ட லபுகமைக்குச் சென்றார். அன்று 25 யானைகள் வரை பிடிக்கப்பட்டன.

கோமகனார் இலங்கைக்கு வருவதற்குச் சில வருடங்களுக்கு முன்னர் தான், கொழும்பிலிருந்து அம்பேபுசை வரை இருப்புப்பாதை அமைப்பதற்காக, கொழும்பில் இலங்கைத் தேசாதிபதியால் முதன் முதலாக மண் வெட்டப்பட்டது. இவ்வேலை கோமகனார் இலங்கைக்கு வந்த ஆண்டிற்றான் பூர்த்தியாயிற்று. ஆகவே முதன் முதலாகக் கொழும்பிலிருந்து அம்பேபுசைக்குக் கன்னிப் பிரயாணஞ் செய்த புகையிரதம் பல பிரமுகர்களை ஏற்றிச் சென்றது. கோமகனும், இலங்கைத் தேசாதிபதியும் சட்ட சபை அங்கத்தவர்களான திரு. ஜோர்ஜ்வால், திரு. ஜோன் கப்பர், திரு. வீ. எச். லோரன்ஸ் ஆகிய மூவரும் வேறு பலரும் முதன் முதலாக இலங்கையில் ஓடிய புகையிரதத்தில் சென்றனர். கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள " அல்விரட்ஹவுஸ் " எனும் மாளிகையில் மொரட்டுவையைச்சேர்ந்த திரு. சார்ல்ஸ் ஹென்றி டி. சொயிசா, கோமகனுருக்குப் பெரிய தொரு விருந்தளித்தார். ஈராயிரத்துக்கு மேற்பட்ட விருந்தினர் வரவழைக்கப்பட்டனர். இவ்விருந்தில் கோமகனார் உபயோகிப்பதற்காக, கோப்பை, கத்தி, முள்ளுக்கரண்டி முதலியன நவரத்தினங்களும் முத்துக்களும் பதிக்கப்பெற்று தங்கத்தினால் செய்யப்பட்டிருந்தன. நடனக் கச்சேரிகளும் வாத்தியக்கச்சேரிகளும் நடைபெற்றன. கொழும்புப் புறக்கோட்டையிலுள்ள பழைய நகர மண்டபத்துக்குக் கோமகனார் அத்திவாரக்கல் நாட்டினார். பின்னர் திருக்கோணமலைக்கும் காலிக்கும் விஜயஞ் செய்து, கொழும்புக்குத் திரும்பிவந்து இலங்கை மக்களிடம் விடைபெற்றுச்சென்றார்.

ஐந்து வருடங்களுக்குப் பின், அதாவது 1875 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியன்று, விக்ரோறியா மகாராணியின் மூத்த புதல்வர் உவேல்ஸ் இளவரசர் அல்பேட் எட்வேட் (இவரே பின்னர் ஏழாவது எட்வேட் மன்னராக முடிசூட்டப்பட்டார்). கொழும்பில் வந்திறங்கினார். உவேல்ஸ் இளவரசர் கண்டிக்குச் சென்றபொழுது, அவருக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இராஜ பெறஹராவைக் கண்டுகளித்தார். **கண்டியில் தலதா மாளிகையில் வருடம்தோறும் பெரஹரா விழா நடைபெறுவது வழக்கம். ஆனால் அரச குடும்பத்தினர் இலங்கைக்கு விஜயஞ் செய்யுங் காலத்தில் அவர்கள் பார்ப்பதற்காக விசேஷ பெரஹரா விழா ஒழுங்கு செய்யப்படும். இதுவே இராஜ பெரஹரா எனப்படும்.** ஆண்டுதோறும் வழக்கமாக நடைபெறும் கண்டி பெரஹராவிலும் பார்க்க, இராஜ பெரஹரா ஊர்வலத்தில் அநேக அதிகாரிகளும் திசாவைமாரும் பிரதானிகளும் கலந்து கொள்வார்கள். உவேல்ஸ் இளவரசர் இலங்கைக்கு விஜயஞ் செய்யும்பொழுது, இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் ஒன்றுகூடி உவேல்ஸ் இளவரசியிடம் கொடுக்கும்படி தமிழ்ப் பெண்கள் அணியும் ஆபரணங்களைக் கொண்ட வெள்ளி நகைப்பெட்டியொன்றை அளித்தார்கள். நகைகளின் விவரம் இக்கால மக்களின் கவனத்தை ஈர்க்கத்தக்கதாயிருக்கின்றது :

பவளங்களும் வைரங்களும் பதிக்கப்பெற்று நாகபாம்புபோற் செய்யப்பட்ட ஒரு சோடி காப்பு, முத்துக்கள் பதித்த யானை மயிர்க் காப்பு, ஏழு யானைகளின் உருவம் படைத்த ஒரு கடகம்; ரோசா மலர்த் தொடர்போல் செய்யப்பெற்ற ஒரு சங்கிலி ; ஒரு கண்டிகை ; ஒரு நீண்ட புரோச்சு ; ரோசாமலர் உருவில் செய்யப்பெற்ற இரு காதணிகள் ; ஒரு சோடி காதோலைகள் (புழுக்கூடு வடிவம்) ; மூன்று மோதிரங்கள் ; நான்கு பகுதிகள் கொண்ட ஒரு மோதிரம் ; ஏழு பகுதிகள் கொண்ட வேறொரு மோதிரம் ; இந்த நகைகள் யாவும் ஒரு வெள்ளிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. பெட்டியின் மூடியில் ஒரு காடும் அக்காட்டைச் சுற்றி தாமரை வளையமொன்றும் பொறிக்கப்பட்டிருந்தன. உட்புறத்தில் உவேல்ஸ் இளவரசியின் இறகுச் சின்னங்களும், இலங்கையிலுள்ள தமிழ் மாகாணங்கள் வழங்கிய பரிசில் என்பதைக் குறிக்கும் வாக்கியங்களும் பொன்னால் ஆங்கிலத்திலும் தமிழிலும் பொறிக்கப்பட்டிருந்தன. பன்னிரண்டு சிறந்த கலைஞர்களின் உழைப்பினாலேயே இவ்வாபரணங்கள் உருப்பெற்றன, இவர்களுள் கார்த்திகேசர் சுப்பிரமணியர் என்பவர் ஒருவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வாபரணங்கள் குறிக்கப்பட்ட தினத்தன்று வந்து சேராமையால், இப்பரிசிலை உவேல்ஸ் இளவரசரிடம் ஒப்படைப்பதற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட தூதுக் குழு நம்பிக்கையிழந்து ஏக்கமுற்றது. ஆனல் டிசெம்பர் மாதம் 8 ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் வரவேற்புச் சபைத்தலைவரும் யாழ்ப்பாணக் கச்சேரி முதலியாருமாகிய திரு. கே. பி. கனகரத்தினம் இரண்டு நாட்களாகப் பாய்க்கப்பலில் பிரயாணஞ் செய்து ஒருவாறு கொழும்பு வந்துசேர்ந்தார். முதலியாரைக் கண்ட பின்புதான் தூதுக் குழுவுக்கு இருந்த ஏக்கம் நீங்கியது. இத்தூதுக் குழுவில் முதலியாரைத் தவிர கலியாண, பிறப் பிறப்பு பதிவாளர் திரு. சொலமன் ஜோன்பிள்ளை (வரவேற்புக் குழு காரியதரிசி) யாழ்ப்பாண மணியகாரன் முதலியார் எஸ். மாணிக்கவாசகர், வலிகாமம் மேற்கு மணியகாரன் இரகுநாத முதலியார், சத்திரவைத்தியர் டக்ரர் வில்லியம் போல், முல்லைத்தீவு முதலியார் இரத்தினசிங்க முதலியார், யாழ்ப்பாணப் பெரிய கோட்டுக் சக்கிடுத்தார். திரு. ஜே. நோலன், சாவகச்சேரி, கீழ்க் கோட்டு முதலியார் திரு. என். விசுவநாதபிள்ளை, திரு. எஸ். இராமலிங்கம், திரு. டபிள்யு. சோமசுந்தரம், திரு. எம். எம். காதர் முகையதீன் ஆகியோர் வரவேற்புச் சபை அங்கத்தவராக இருந்தனர். கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளாக, கொலோனியல் சத்திரவைத்தியர் டக்ரர் எம். கோவிந்தன், கிழக்கு மாகாண பிரதான முதலியார் திரு. இசக்கியேல் சோமநாத முதலியார், மட்டக்களப்புக் கச்சேரி சிருப்பர் டபிள்யு. அழகக்கோன் முதலியார் ஆகியோர் இருந்தனர்.

பரிசிலை உவேல்ஸ் இளவரசரிடம் ஒப்படைப்பதற்கு இன்னும் அரை மணித்தியாலந்தான் இருந்தது. இராணிமாளிகையில் பரிசைக் கொடுப்பதற்கும் வரவேற்புப் பத்திரத்தை வாசிப்பதற்கும் தேசாதிபதியவர்கள் பின்வரும் ஒழுங்கு முறையைச் செய்தார். முதலியார் கனகரத்தினமும், கிழக்கு மாகாண பிரதம முதலியாரும் நகைப்பெட்டியைப் பிடித்துக்கொள்ள வேண்டும். திரு. ஜோன்பிள்ளை வரவேற்புப் பத்திரத்தை வாசித்தல் வேண்டும்; வரவேற்புப் பத்திரம் வைத்துக்கொடுக்கும் அழகிய பேழையை முதலியார் அழகக்கோன் வைத்திருத்தல் வேண்டும் என ஒழுங்குசெய்யப்பட்டது.

சரியாகப் பிற்பகல் 4.30 மணிக்கு உவேல்ஸ் இளவரசர் இராணி மாளிகையிலுள்ள வரவேற்பு மண்டபத்தில் பிரசன்னமானர். வரவேற்புச் சபை அங்கத்தவர்களைத் தேசாதிபதி, உவேல்ஸ் இளவரசருக்கு அறிமுகஞ் செய்துவைத்தார். பின்னர் திரு. ஜோன்பிள்ளை வரவேற்புப் பத்திரத்தை வாசித்து முடித்ததும் அதனைப் பேழையில் வைத்து இளவரசரிடம் சமர்ப்பித்தார். அதன்பின்னர் கனகரத்ன முதலியாரும், சோமநாத முதலியாரும் முன்வந்து நகைப்பெட்டியைச் சமர்ப்பித்தனர். இளவரசர் நகைகளை நன்ருகப் பார்த்து சில கேள்விகள் கேட்டார்.

உவேல்ஸ் இளவரசர் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் கொழும்புத் துறைமுகத்தில் தென்மேற்கு அலைதாங்கி கட்டுவதற்கு அத்திவாரக்கல் நாட்டினர். இவர் விஜயஞ் செய்ததன் ஞாபகார்த்தமாக மொரட்டுவையில் உவேல்ஸ் இளவரசர், உவேல்ஸ் இளவரசி கல்லூரிகள் நிறுவப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள மணிக்கூண்டுக் கோபுரமும் உவேல்ஸ் இளவரசரின் இலங்கை விஜயத்தை ஞாபகமூட்டும் சின்னமாக அமைக்கப்பட்டது.

1882 ம் ஆண்டு தை மாதத்தில் எட்வேட் மன்னருடைய புதல்வர்களாகிய அல்பேட் விக்ரர் இளவரசரும் (கிளாரன்ஸ் கோமகனுர்) ஜோர்ஜ் இளவரசரும் (இவரே பின்னர் ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரானுர்) கப்பற் பணியாளர்களாக பிரித்தானியக் கப்பலொன்றில் இலங்கைக்கு வந்துசேர்ந்தனர். இதுவும் ஒரு வகையில் முக்கியமான சம்பவமாகும். ஏனெனில் பிரித்தானிய அரச குடும்பத்தைச்சேர்ந்த சகோதரர் இருவர் ஒரே முறையில் விஜயஞ்செய்தது இதுவே முதல் தடவையாகும். இவர்களுக்குக் குதூகல வரவேற்பளிக்கப்பட்டது. இவ்விரு சகோதரரும் வேலியடைப்புக்குள் யானைபிடிப்பதை லபுகமையில் கண்டுகளித்தனர். திரு. சொலமன் டயஸ் பண்டாரநாயக்க (பின்னர் சேர் பட்டம் பெற்றவர்) அவர்களுக்கு வாளும் பட்டியும் அளித்து முகாந்திரப்பட்டத்தை இளவரசர் அளித்தார்.

இவ்விரு சகோதரரும் லபுகமைக்குச் செல்லும் பாதையில் ஒரு பெரிய அகழியைக் கடக்க வேண்டியிருந்தது. அல்பேட் இளவரசர் குதிரையிலிருந்து இறங்கி, அந்த அகழியைச் சுற்றி நடந்து சென்ருர். ஆனல் ஜோர்ஜ் இளவரசர் குதிரையில் இருந்தவாறே ஒரே பாய்ச்சலில் அகழியைத் தாண்டியதைப் பார்த்துக் கொண்டிருந்த தோட்டத்துரைமார் இளவரசனின் வீரச் செயலைக்கண்டு அதிசயித்து கைகொட்டித் தம் மகிழ்ச்சியை வெளிக்காட்டினர். அவர்கள் கண்டிக்கும் சென்று இராஜ பெரஹரா விழாவைக் கண்டுகளித்தனர்.

அல்பேட் விக்ரர் இளவரசர் 1892 ல் காலஞ்சென்றுவிட்டார். ஆனல் அவருடைய சகோதரர் (ஐந்தாவது ஜோர்ஜ் மன்னர்) மீண்டும் இருமுறை இலங்கைக்கு விஜயஞ்செய்துள்ளார்.

1870 ல், ஏழாவது எட்வேட் மன்னரின் சகோதரர் கொன்னேட் கோமகனுர் தம்மனைவியுடனும், தம்மகள் பற்றிஷியா இளவரசியுடனும் இலங்கைக்கு வந்தார்.

1901 ஏப்ரில் 12 ந் திகதி கோன்வால் கோமகனும் கோமகளாரும் (ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரும் மேரி மகாராணியும்) அவுஸ்திரேலியாவுக்குப் போகும் மார்க்கத்தில் இலங்கைக்கும் விஜயஞ் செய்தார்கள். ஐந்தாவது ஜோர்ஜ் மன்னர் இரண்டாவது தடவை (முதல் வந்தது 1882 ல்) இலங்கைக்கு வந்தபோது முன்னெருபோதும் நடைபெற்றிராத குதூகல வரவேற்பளிக்கப்பட்டது. கண்டியில் இராஜ பெரஹரா விழா அதி விமரிசையாக நடைபெற்றது. கொழும்பில் நகர சங்கம் அளித்த வரவேற்பில் கோன்வால் இளவரசிக்குத் தங்கப் பெழையொன்றைப் பரிசிலாக அளித்தது. கொழும்பிலே கோமகனும் மனைவியாரும் இரத்தின வியாபாரக் கடைகளுக்குச் சென்று 1,000 பவுண் பெறுமதியான பலவகை இரத்தினங்களையும் நகைகளையும் வாங்கினுர்கள்.

1907 ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கொன்னேட் கோமகனுர் தம் மனைவியுடனும் மகளுடனும் மீண்டும் இலங்கைக்குவந்தார். இப்பொழுது வின்சர் கோமகனுராகவிருக்கும் உவேல்ஸ் இளவரசர் எச். எம். எஸ். ரிகைன் எனும் போர்க்கப்பலில் 1922 ம் ஆண்டு மார்ச் மாதம் 21 ந் திகதி இலங்கைக்கு விஜயஞ் செய்தார். கொழும்பிலே வந்திறங்கியதும், பெருந்திரளான மக்கள் குழுமியிருந்து வரவேற்பளிக்க, ஊர்வலமாகச் சென்று இராணி மாளிகையை யடைந்தார். இலங்கை இலகு காலாட் படைக்கு உவேல்ஸ் இளவரசர் அப்படைக்குரிய கொடியைப் பரிசளித்தார். கண்டியில் பல சம்பிரதாயங்களுடன் கூடிய ராஜ பெரஹரா நடைபெற்றது. அதனைப் பார்த்துவிட்டு உவேல்ஸ் இளவரசர் நுவரெலியாவுக்குச் சென்று கொழும்புக்குத்திரும்பினுர். இளவரசர் புறப்படும் தினத்தன்று ருசிகரமான சம்பவம் நிகழ்ந்தது. இளவரசர் இராணி மாளிகையிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் மெல்ல நழுவிவிட்டார். இலங்கைத் தேசாதிபதியும் இராணி மாளிகை உத்தியோகத்தரும் இளவரசரைத் தேட ஆரம்பித்தனர். அவர் பாசறையில் கொடித்தம்பம் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டபின்னரே தேசாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியின் ஏக்கம் தீர்ந்தது. பின்னர் உவேல்ஸ் இளவரசர் தூரகிழக்கு நாடுகளுக்குச் சென்று திரும்பும்பொழுதும், திரிகோணமலையில் வந்திறங்கி இரண்டு நாட்கள் கொழும்பில் தங்கி மீண்டும் தம் பிரயாணத்தை ஆரம்பித்தார்.

1925 ம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் இளைய புதல்வர் ஜோர்ஜ் இளவரசர் (காலஞ்சென்ற கென்ற் கோமகனார்) சீனாவுக்குப் போகும் மார்க்கத்தில் இலங்கைக்கு விஜயஞ் செய்தார். ஜோர்ஜ் இளவரசர் வேறொரு தடவை அவுஸ்திரேலியாவுக்குப் போகும் மார்க்கத்தில் 1929 ல் இலங்கைக்கு விஜயஞ்செய்தார்.

1929 ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஹென்றி இளவரசர் (கிளொஸ்டர் கோமகனார்) யப்பானுக்குப் போகும் வழியில் இலங்கைக்கு வந்துள்ளார். இலங்கை மக்கள் பன்னெடுங்காலம் கோரிவந்த கண்டி மன்னரின் சிங்காசனத்தையும் மணிமுடியையும் செங்கோலையும் தன் தந்தையாராகிய ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரிடமிருந்து கிளாஸ்டர் கோமகனார் 1934 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந்திகதி இலங்கைக்குக் கொண்டுவந்து சேர்த்தார். பின்னர் இலங்கையைத் தரிசித்து தனது சகோதரர் ஆறாவது ஜோர்ஜ் மன்னருக்கு அறிக்கை சமர்ப்பிக்க கிளொஸ்டர் கோமகனார் 1942 ம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கைக்கு வந்தார். இவர் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும்போது 1945 ம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் திரும்பிவரும்போது 1947 ம் ஆண்டிலும் இலங்கையைத் தரிசித்தார். கிளொஸ்டர் கோமகனார் தம்மனைவியுடன் ஆறாவது முறை இலங்கைக்கு விஜயஞ் செய்து காலஞ்சென்ற ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் பிரதிநிதியாக புதிய டொமினியன் பாராளுமன்றத்தைத் திறந்துவைத்தார்.

1952 ல் கென்ற் கோமகளார் தம் மகனுடன் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் மார்க்கத்தில் இலங்கைக்கு விஜயஞ்செய்து பின்னர் திரும்பிப் போகும்போது அதே வருடம் செப்ரெம்பர் மாதத்திலும் இலங்கைக்கு மீண்டும் விஜயஞ்செய்தார்.

ஏப்ரல் மாதம் 10 ந் திகதியன்று இலங்கை மக்கள் மணிமுடி தரித்த அரசியையும் அவர் கணவரையும் வரவேற்கும் பாக்கியத்தைப்பெற்றனர்.

வாழ்க எலிசபெத் மகாராணி !
வாழ்க இலங்கை மகாராணி !

---

# எலிசபெத் மகாராணியின் ஈழநாட்டு விஜயம்

[அமுது]

(1) ஈழ மென்ற மாங்கனியின் சுவையை உண்ண
எழுந்து வரும் **எலிசபெத்** அரசி வாழ்க !
வாழையடி வாழை யென அரசு தாங்க
மணிமுடியைத் தரித்தவளே ! சிற்பத் தூணே !
வாழுகின்ற சித்திரமே ! வீர வாள்கள்
வலிமையினால் அமைத்தபெரும் மண்ணைத் தூக்கித்
தோளினிலே சுமப்பவளே ! அன்புத் தெய்வம்
துணைபுரிக உன்னாட்சி தழைக மாதோ !

(2) மணிமுடியை நீதரித்த நாளின் முன்னே
மாவீரர் இமயமலை உச்சி கண்டார் ;
அணியீழ நாட்டினிலே அடிகள் தூக்க
அலைகடலைப் பிளந்துநவ ரத்ன சாமி
துணிவான உள்ளமொடுந் தோளி னோடும்
சுகமாகப் பரதகண்ட மண்ணைச் சேர்ந்தார்.
பணியாநின் புகழ்மலையும் கடலும் தாண்டப்
பாரினிலே எவ்வீரர் பிறப்பார் அம்மா !

(3) அல்லியெனும் தமிழரசி வீரத் தோடு
ஒளவை யென்பாள் நன்மொழியாம் அமுதம் சேர்த்
சொல்லரிய கண்ணகியின் கற்பில் நீற்றிச் [துச்
சுகிர்தகுணப் பெண்மணிகள் சரிதம் தோய்த்துச்
தொல்லுலகில் மெல்லியலார் சிறப்புக் கொண்டு
சுடரோனும் மறையாத உலகங் காக்கும்
நல்லிதயத் தளபதியே ! அறத்தின் தாயே !
நானிலத்தில் நன்னிழலைச் செய்வாய் அம்மா !

---

# மகாராணியார் மீது வாழ்த்துப்பா

**பண்டிதமணி க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார்.**

1. இமயமலைச் சிகரத்தின் தலையைமிதித் துலகமெலாம்
ஏற்றங் கொள்ள
அமையுந்தன் கையாலே கடல்நீந்திக் கரைசேரும்
ஆற்றல் எய்த
எமையருள வேண்டுமென இலங்கைதன்மேல் நோக்கு
வைத்த இயல்பானன்றே
கமையரசி எலிசபெத்து மாராணி கண்டோநின் கருணை
யானே.

2. ஈழமது தன்னாட்சி எய்திடவே எங்கள்மேல் இரக்கங்
கொண்டு
ஆழியுடை சூழுலகம் அதிசயிக்க எமக்கீந்த அருளி
னாலே
ஊழிபல கழிந்தாலும் உலக்காத பெருங்கொடைக்கே
உரிமை யானாய்
வாழிமழை வாழியுந்தன் குடைகொடையும் வழிவழியே
வாழி மாதோ

3. பூமகனும் எடின்பரோ எனச்சான்றோர் புகழ்ந்தென்றும்
ஏத்திக் கூறும்
கோமகனும் திருமகற்கே தன்னன்பை உரிமைசெயும்
குணங்கள் கொண்ட
பூமகளே எலிசபெத்தாம் பொன்மகளே நன்மகளே
புகழ்ந்து போற்றி
நாமகளும் நடமாட ஞாலமெலாம் நலன்பூக்க
நயந்து வாழி.

4. திருமகள்தான் வந்தனளோ உரைமகள்தான் வந்தனளோ
தேசம் காக்கும்
ஒருமகள்தான் வந்தனளோ உலகமெலாம் -உவப்பெய்தி
உளம்பூ ரிக்க
பெருமகளாம் எலிசபெத்து மாராணி ஈங்குவந்தாள்
எனப்புலவோர் பேணிச்சொல்ல
வருமகளே நின்வரவு நல்வரவாய் எங் கண்முன் வாழ்க
மாதோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தரசிகள்

ஐக்கிய இராச்சிய நாடுகளின் தலைவரும், பிரித்தானிய மக்களின் அன்பிற்குரிய அரசியும், இலங்கை இராணியாருமான இரண்டாம் எலிஸபெத் மகாராணியார் நம் இலங்கைத் தீவைத் தரிசிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்திலே, மகாராணியாருக்கு முன்னர் இத்தீவை ஆண்ட அரசிகளைப் பற்றி சிறிது ஆராய்தல் பொருத்தமுடையதாகும்.

தொன்று தொட்டு நம் இலங்கை நன்றுடும் பெண்களைப் போற்றி வந்திருக்கின்றதென்பது பலவற்றாலும் அறியக்கிடக்கின்றது. சரித்திர காலத்திற்கு மிகவும் முன்னரே இந்நாட்டில் சிறந்து விளங்கிய பெண்மணிகள் பலர் இருந்திருக்கின்றனர். சரித்திரம் எழுதப்பட்ட காலத்திற்கு முன் இராவணன் என்னும் புகழ் பெற்ற அரசன் இலங்கையை ஆண்டானென புராண நூல்கள் தெரிவிக்கின்றன. இவன் பத்து அரசர்களைத் தன் குடைக்கீழ் கொண்டுவந்து இந்தியக் கண்டம் அதிர சிறந்து வாழ்ந்தானெனவும், காவியம் புனைவதிலும், வைத்திய சாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தானெனவும், இந்தியாவில் இமயமலையில் நடைபெற்ற வைத்திய அரங்கத்தில் அங்கம் வகித்தானெனவும் பல நூல்கள் வாயிலாக அறிகின்றோம். இராவணன் அயோத்தியாபுரியின் இளவலான இராமனின் மனைவி சீதையைக் கவர்ந்து வந்ததனால் ஏற்பட்ட பெரும் போரையே இராமாயணம் விவரிக்கின்றது. **இம்மன்னனின் மனைவி மண்டோதரி கற்பிற் சிறந்த பெண்மணியாகத் திகழ்ந்தாள். மண்டோதரியை இராமாயணம் முதலான பல நூல்கள் பெரிதும் வர்ணிக்கின்றன. இவளே இலங்கையின் முதலரசியாவள்.** மண்டோதரிக்குப்பின் நாம் சரித்திர காலத்திற்கு வருகின்றோம். விஜயன் இந்தியாவிலிருந்து இலங்கை வந்தடைந்த பொழுது அழகிலும், வீரத்திலும் சிறந்து விளங்கிய குவேனி இந்நாட்டின் அரசியாயிருந்தாள். விஜயன் இவளைத் தன் வசப்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றித்தானே அரசனானான். குவேனிக்கு இவன் வழியில் இரு குழந்தைகள் பிறந்தனர். விஜயன் அரசனானதும் தனது பட்டமகிஷியாக குவேனியை வரிக்க விரும்பாததால் அக்காலத்தில் பெரும் புகழுடன் தென்னிந்தியாவை ஆண்ட பாண்டிய மன்னனிடம் தனக்கும், தன் தோழர்களுக்கும் பெண் தருமாறு கேட்டு ஓலையனுப்பினான். பாண்டியன் இலங்கை மன்னனுக்கு தன் மகளை மணஞ்செய்து வைப்பதால் இலங்கையும் தென்னிந்தியாவோடு நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ளுமெனவும், விஜயன் கூட்டத்தாரை தன் சுற்றத்தாராக்குதல் நலமெனவும் கருதி—

"பல பெண்களை அவர்களின் பெற்றோருக்கு வேண்டிய சன்மானமளித்துப் பெற்றதுமல்லாமல், தன் மகளை அரச குடும்பத்துக்குகந்தமுறையில் அலங்கரித்து, அப் பெண்களுக்குரிய அந்தஸ்துக்குத்தக்கமுறையில் ஆடை ஆபரணங்களளித்து குதிரைகளையும், வண்டிகளையும் அரச சன்மானமாக வழங்கினான். இத்துடன் பதினெட்டுச் சாதியில் ஆயிரம் குடும்பங்களையும், பல தொழில் வினைஞர்களையும் அனுப்பி வைத்தான்" என மகாவம்சம் கூறுகின்றது. **மதுரையிலிருந்து வந்த பாண்டிய இளவரசியே இலங்கைச் சரித்திரத்தில் இடம் பெற்ற முதலரசியாவள்.** இவள் நாமம் யாதென்பதை நூல்கள் குறிக்கவில்லை.

இதன் பின்னர் ஈழத்தை ஆண்ட பெண், **அனுலா**வென்பவளே. இவள் (கி.மு. 47–42) அனுராதபுரியில் இருந்து அரசு செலுத்தினாள் ; வாலகம்பாகுவின் மகனான சோரநாகனின் மனைவியாவள். அனுலா முதலில் தனது கணவன் சோரநாகனை நஞ்சூட்டிக் கொன்று அரண்மனைக் காவலாளர்களில் ஒருவனான தீசனைக் காதலித்து அவனை அரசனாக்கினாள். பின்னர் அவனையும் கொன்று சிவன், வடுகன், விறகுவெட்டியாயிருந்த தீசன், அரண்மனைப் புரோகிதனான நீலியன் போன்ற முப்பத்திருவரை சோரநாயகர்களாகக்கொண்டு ஐந்து வருடங்கள் அரசாண்டாள். இலங்கைச் சரித்திரத்திலேயே காணமுடியாத கேவல நடத்தையுள்ள அரசி இவளேயாவள். கூடகன்னதிசன் இவளைப் போரில் வென்று நாட்டை இவளது கொடுங்கோன்மையினின்றும் காப்பாற்றினான்.

இவளுக்குப்பின் **சிவலி** என்பாள் அனுராதபுரியில் நாலு மாதங்கள் அரசுபுரிந்தாள். ஈழநாகனால் இவ்வரசி கொல்லப்பட்டாள்.

சிவலிக்குப்பின் நெடுங்காலமாக இலங்கை அரசிகளால் ஆளப்படவில்லை. கீர்த்தியும், புஜபல பராக்கிரமும் வாய்ந்த மகா பராக்கிரமபாகு, இலங்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் கல்வெட்டுகள் பொறித்துச் சென்ற நிசங்கமல்லன் போன்ற அரசர்களால் இக்காலம் சிறந்தது. மகாபராக்கிரமபாகு மன்னன் இலங்கை முழுவதையும் ஒரு குடைக் கீழ் கொண்டுவந்து மறைந்ததும் நாட்டில் குழப்பம் தலைதூக்க வாரம்பித்தது. சில அரசர்கள் அரசாண்டார்கள். ஆனால் அவர்களால் நாட்டில் அமைதி காண முடியவில்லை. கீர்த்தி நிசங்க மன்னனின் சகோதரனான விக்கிரமபாகு அரசுகட்டிலேறி 3 வருடங்கள் ஆட்சி செலுத்தியபின் சோடகங்கனென்பான் தோன்றி இவ்வரசனைக் கொன்று தானே அரசனானான். இவன் பட்டத்துக்கு வந்து 9 மாதங்களுக்குள் சேனாதிபதி கீர்த்தியென்பான் இவனை வென்று சிம்மாசனத்திலிருந்திறக்கி மகா பராக்கிரமபாகுவின் முதலரசியான **லீலாவதியை** அரசியாக்கினான். இவ்வரசி மூன்று வருடங்கள் நாட்டை ஆட்சி செய்ததன் பின் சகசமல்லன் அரசைக் கையேற்றான். இவனது ஆட்சியும் வெகு காலம் நீடிக்கவில்லை. புஜபல பராக்கிரமம் வாய்ந்த ஆயசமந்தன் இவனை விரட்டி கீர்த்தி நிசங்க மன்னனின் முதலாம் பட்டமகிஷி, **கல்யாணவதியை** சிம்மாசனத்தில் எற்றுவித்தான்.

**கல்யாணவதி** ஆழ்ந்த பௌத்த மதப் பற்றுடையவளாயிருந்தாள். இவள் பர்ணசாலக என்னுமிடத்தில் ஒரு விகாரையை எழுப்பி தன் நாமத்தைச் சூட்டினாள். இதனைக் கொண்டு நடத்த கிராமங்களையும், வயல்களையும், மற்றும் உபகரணங்களையும் அடிமைகளையும் விகாரைக்குச் சொந்தமாகக் கையளித்தாள். இவ்வரசியின் விருப்பத்திற் கிணங்க சேனாதிபதி ஆயசமந்தன் அரசகாரியங்களைக் கவனித்து வந்தான். இவன் வருணாச்சிரதர்மத்தை இலங்கையில் மீண்டும் நிலைநாட்டப் பெரிதும் பாடுபட்டான். இவன் ஒரு நீதி நூலையும் தயாரித்தான். ஆயசமந்தனுக்குப்பின் தர்மாசோகன், அனிகங்கன் ஆதியோர் ஆட்சி செய்தனர். மீண்டும் பராக்கிரமபாகுவின் பட்டமகிஷி லீலாவதி சிம்மாசனமேறி ஒரு வருடம் ஆட்சி செய்தாள். லோகேஸ்வரன் லீலாவதியிடமிருந்து அரசைக் கைப்பற்றி ஆண்டுவரும் நாளில் இவனது ஆட்சியை விரும்பாத மக்கள் திரண்டெழுந்து லோகேஸ்வரனை விரட்டி மூன்றும் முறையாக லீலாவதியை அரசியாக்கினர். லீலாவதி அரசியாயிருந்த காலத்திலேயே சிங்கள இலக்கிய நூலான " **சசதாவதம்** " இயற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............



லீலாவதிக்குப்பின் போர்த்துக்கீசர் காலம் வரையும் இலங்கையில் பெண்கள் அரசிகளாகத் திகழ்ந்ததாகச் சரித்திரத்தில் குறிக்கப்படவில்லை. 16 ம் நூற்றாண்டிலே முதலாம் இராசசிங்கனால் விரட்டப்பட்ட தொன்பிலிப்பின் மகள் தோனா கத்தரினா என்பவளே கண்டிக்கரசியாகத் தகுதியுடையாளெனப் போர்த்துக்கீசர் கருதியமையால், கண்டி அரசைக் கைப்பற்றி அரசு கட்டிலேற்றிய முதலாம் விமலதர்மசூரியனை முறியடித்து அவளையே அரசியாக்கத் துணிந்தனர். இவர்களின் முயற்சி வியர்த்தமடைந்ததோடல்லாமல் கன்னொறுவையில் விமலதர்மன் போர்த்துக்கீசப் படையை சர்வநாசஞ் செய்து தோனா கத்தரினாவையும் சிறைப்படுத்தி அவளைப் பலவந்தமாக மணம் புரிந்து கொண்டான்.

தோனாகத்தரினா விமலதருமனின் பட்டமகிஷியாகவும், அவன் காலத்தின் பின்னர் பட்டத்திற்கு வந்த சேனாரதனின் பட்டமகிஷியாகவும் இருந்தாள்.

---

## குரும்பசிட்டி மாதர்சங்கப் பொதுக்கூட்டம்.

1954 ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் குரும்பசிட்டி சன்மார்க்க மாதர் சங்கப் பொதுக் கூட்டம் சன்மார்க்க கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இணுவில் மைக்லியோட் மருத்துவ வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் அம்புறோஸ் அவர்கள் தலைமை தாங்கி சிசு வளர்ப்பைப் பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது: " குழந்தைகளைப் பேணி நடப்பது தாய்மார்களின் ஓர் முக்கிய கடமையாகும். அதற்குத் தாய்மார்கள் முக்கிய அத்தியாவசியமான சுகாதார விதிகளை கற்க வேண்டும். பின்பு அவற்றை நடை முறையில் அனுஷ்டிக்க வேண்டும். இவற்றுக்கு இவை போன்ற ஸ்தாபனங்கள் இன்றி அமையாதனவாகும். "

பின்பு இணுவில் மருத்துவசாலையைச் சேர்ந்த இரு மருத்துவப் பெண்கள் குழந்தைகளைக் குளிப்பாட்டும் முறையை நடைமுறையில் செய்துகாட்டினார்கள். பின்பு வலிகாமம் வடக்கு கிராம முன்னேற்ற உத்தியோகஸ்தர் திரு. ரி. குமாரசாமி பேசுகையில் " பெண்கள் சிக்கன வாழ்வை கடைப்பிடிக்கவேண்டும். குழந்தைகளை மிகவும் பேணி சுகாதார விதிப்படி வளர்த்து எங்கள் சுதந்திரத்தை காப்பாற்றும் வீரர்களாக திகழச் செய்யவேண்டும் " என்று கூறினர். பின்பு நடைபெற்ற இனிய கதம்பக் கச்சேரியுடனும் மங்களேஸ்வரி சின்னத்துரை அவர்களின் நன்றியுரையுடனும் கூட்டம் முடிவெய்தியது.

---

மதிப்புரை

## " இசை இன்பம் "

தமிழ் மக்களுக்கென்று பல நூல்களை ஆக்கித் தந்த சுதுமலை பண்டிதர் ஸ்ரீமான் ஆ. சி. நாகலிங்கம்பிள்ளை அவர்கள் எழுதிய "இசை இன்பம்" எனும் சிறு நூல் கிடைக்கப் பெற்றோம். இதில் உழவு, கைத்தொழில், வாணிபம், ஒழுக்கம், சுகாதாரம் முதலியவற்றின் அவசியமும், பலாபலனும் பாடல் ரூபத்தில் சுருங்கச் சொல்லி விளக்க வைக்கப்பட்டுள்ளன. பால்யப் பராயத்தில் மாணவர் மனதிற் பதித்தற்கு ஏற்றவையாக இவை காணப்படுகின்றனவாதலால் மாணவருலகம் இந்நூலினை வரவேற்று நற்பயனடையலாம். பிள்ளையவர்கள் சிரமமின்றிச் சிறந்த கவிபாடும்வன்மை வாய்க்கப்பெற்றவரென்பது நன்கு புலனாகின்றது.

**பிரசுரம்:** சண்முக நாதன் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

---

## இரண்டாவது எலிசபெத் மகாராணியின் வாழ்க்கையிற் சில முக்கிய சம்பவங்கள்

[4 ம் பக்கத் தொடர்ச்சி]

அப்பொழுது அவருக்கு 14 வயதே நிரம்பியிருந்தது. ஆனால் அவரது பேச்சு குறிப்பிடத்தக்க விதமாக விருந்தது. தெளிவாகவும் உறுதியானதொனியிலும் அமைந்த இவரது ஒலிபரப்பு அதனைச் செவியுற்றவர்களின் மனங்களில் ஒரு உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தியது.

யுத்தம் முடிவதற்கான அறிகுறிகளோடு இவர் தமது பதினெட்டாவது வயதையடைந்தார். இது அவரது வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயத்தை ஆரம்பித்தது. ஐரோப்பாவில் யுத்தம் முடிவடைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்தான் இளவரசியின் விருப்பம் நிறைவேற்றப்பட்டது—ஏ. ரீ. எஸ். படையில் இவர் ஒரு அதிகாரியாக நியமனஞ்செய்யப்பட்டார்.

சமாதானத்தோடு இவரது கடமைகளும் அதிகரித்தன. எனவே இவர் தமது பொது அலுவல்களைக் கவனித்துக் கொள்வதற்கு சில உத்தியோகத்தர்களையும் அமர்த்திக்கொண்டார். மேலும் அரசகுடும்பம் தத்தம் நாடுகளுக்கு விஜயம் செய்ய வேண்டுமென ஒவ்வொரு குடியேற்ற நாடும் அழைப்பு விடுத்தது. மன்னர் பிரான் தம் குடும்பத்துடன் தென்னாபிரிக்காவுக்குப் போவதெனத் தீர்மானித்தார். ஆனால் ஒரு வருடகாலத்துக்கு மேல் கழிந்தபின் 1947 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ந் திகதி " எச். எம். எஸ். வான்கார்ட் " என்னும் கப்பலில் அரசகுடும்பம் பிரயாணமாயிற்று.

இளவரசியாருக்கு இவ்வருடம் மிகவும் சந்தோஷகரமான ஒரு வருடமாகும். ஏனெனில் அரச குடும்பத்தினர் தங்கள் தென்னாபிரிக்க சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் 1947 ம் ஆண்டு கோடை காலத்தில், எலிஸபெத் இளவரசி கிரேக்க நாட்டு பிலிப் இளவரசரை திருமணஞ் செய்வாரென பிரகடனஞ் செய்யப்பட்டது. பாராளுமன்றமும் இத் திருமணத்தை உத்தியோக பூர்வமாக அங்கீகரித்தது.

எலிஸபெத் இளவரசியின் திருமணம் நவம்பர் மாதம் 20 ந் திகதி வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்று லண்டன் நகர் இந்திர லோகத்தைப் போல் காட்சியளித்தது. இவர்கள் தம் தேனமதியை முறையே இங்கிலாந்திலும் ஸ்கொத்திலாந்திலும் உல்லாசமாகக் கழித்து விட்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு சாண்டிரிங்ஹாம் அரண்மனைக்குத் திரும்பினார்கள்.

1948 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ந் திகதி எலிஸபெத் இளவரசி ஒரு ஆண் மகவை ஈன்றெடுத்தார். இவருக்கு சார்லஸ் இளவரசர் என திருநாமஞ் சூட்டப்பட்டது.

1950 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் ஆன் இளவரசி பிறந்ததையிட்டு நடைபெற்ற தேசிய கொண்டாட்டங்கள் மன்னர் பிரானுக்கேற்பட்ட சுகயீனத்தால் சோபையிழந்தன.

[14 ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருஷப் பிறப்பு

புது வருஷத்தில் நேயர்களுக்குச் சகல நலன்களும் உண்டாக வேண்டுமென்று விழைகின்றோம். யாவரும் கஷ்டமற்றவர்களாய், ஒருவரை யொருவர் நேசிப்பவர்களாய், ஊக்கமுள்ளவர்களாய் வாழ்ந்தால் ஈழவளநாடு மேலும் மேலும் முன்னேற்றமடைந்து கொண்டே போகும். "பிறந்த நன் நாடு நற்றவ வானினும் நனிசிறந்தது" என்பதை நாம் அனைவரும் நன்ருக உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

உலகின் பல பாகங்களிலும் நிகழ்ந்து வரும் விஷயங்களைக் கவனிக்கும் போது, நம் நாடு அவற்றில் அநேகமானவற்றை விட நல்ல நிலைமையிலிருந்து வருவது புலனுகும். நம் நாட்டில் கலகமில்லை. பெரும் பஞ்சமில்லை. கஷ்டமான நேரத்திற் கூட நம் அரசாங்கம் ஒரு வயிற்றுக் கஞ்சிக்காவது வசதியை அளித்துக்கொண்டே வருகிறது.

வருஷங்கள் பல பிறந்து நம்மை மகிழ்வித்துக் கொண்டே செல்கின்றனவெனினும், நாம் ஒரு சில விஷயங்களில் பிற்போக்கான நிலையிலிருந்து வருகிறோமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். உணவு, உடை, வீடு என்பவற்றில் நாம் சுயதேவையைப் பூர்த்தி செய்யாதிருப்பது நாம் இழைக்கும் ஓர் பெருங்குற்றமாகும்.

சுதந்திரமடைந்து, சுதந்திரமாய்ச் செயலாற்ற விரும்பும் நாம் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யப் பாடுபட வேண்டியதவசியம். செழித்த மண்ணுக்கும், சிறந்த நீரோடைகளுக்கும், திடகாத்திர வாலிபர்களுக்கும் பஞ்சமேயில்லாத ஈழவளநாட்டில் உணவு பற்ருதிருப்பது வெட்கத்துக் குரியதாகும். படிக்கிறோம், படிக்கிறோமென்றலைந்து அரைகுறையான படிப்புகளை முடித்துவிட்டு, குமாஸ்தா வேலையே வேண்டுமென்று அலையும் வாலிபரின் உள்ளத்தில் தேசிய உணர்ச்சி சுடர்விட்டெரியத் தொடங்க வேண்டும். தம் கல்வியின் பயனை அவர்கள் கைத்தொழில், கமத்தொழில் விருத்திகள் மூலம் செயலில் காட்ட வேண்டும். பாமர மக்களுக்குத் தேவையான எத்தனையோ விஷயங்களுக்குத் தேவையான பணத்தை மீதப்படுத்தும் வழியை, படித்த மக்களே அரசாங்கத்துக்குக் காட்ட வேண்டும்.

ஜனப் பெருக்கம், உணவின்மை, பணக்கஷ்டம், வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பாதையில் நம் நாடு சற்றே விலகிச் செல்லப் பார்ப்பதை நாட்டு மக்கள் விழிப்புடன் கவனிக்க வேண்டியதவசியம். வெள்ளம் வருமுன் அணைகட்டி விடுவோமாயின் நாம் தப்பிப் பிழைத்துவிடுவோம். "முயற்சி திருவினையாக்கும்" என்ற மூதுரை புதுவருடத்தில் நமக்கு ஊக்கமளிக்கும் சுலோகமாக அமைந்தால், எந்தக் கஷ்டத்தையும் இலகுவில் வெல்லலாம். தமிழ் வீரன் நவரத்தினசாமியின் சாதனை நம் புதுவருடத் திட சங்கற்பங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், நற்சகுனமாகவும் கொள்ளப்படின் நம் நாடு இப்புது வருடத்தில் எந்தத் துறையிலும் முன்னேற்றமடையும் என்பதற் கையமில்லை.

ஜய வருஷ மெனை அழைக்கப்படும் இப்புதுவருடம் ஏப்ரில் மாதம் 13 ந் திகதி பிற்பகல் 5.40 க்கு பிறக்கின்றது.

இச்சுப தினத்தையும் சுப வேளையையும் நாமனைவரும் வழமைபோல் எதிர்பார்க்கின்றோம். அன்று பிற்பகல் 1.40 தொடக்கம் இரவு 9.40 வரை விஷு புண்ணிய காலமாகும்.

"இப்புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து, சிரசில் விளாவிலையும், காலில் கடப்பமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து, சிவப்பு கறுப்பு நிறமுள்ள பட்டாயினும், சிவப்பு, கறுப்புக் கரையமைந்த ஆடையாயினுந் தரித்து பவளம் மரகதம் இழைத்த ஆபரணம் அணிந்து தத்தங் குலதெய்வ வழிபாடு செய்து குரு, பெற்ருர் முதலிய பெரியாரை வணங்கி அவரின் ஆசீர்வாதம் பெற்று, உற்ருர் நண்பர்களுடன் அளவளாவி, அறு சுவையமைந்த உணவுடன் பொரிக்கறி, கசப்பு என்பவை சேர்த்தருந்தி, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, தாம்பூலந்தரித்து, கண்ணுடி தீபம் நிறைகுடம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து, புதிய வருஷ பலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து அரிய தவத்தாற் பெற்ற மானிடப் பிறவியிற் செயற்பாலனவற்றை நன்கு விசாரித்துத் தெளிந்து, மங்களகரமாக வாழக்கடவர்" என யாழ்ப்பாணத்தில் பதிப்பிக்கப்பெற்ற ஜயவருஷ வாக்கிய பஞ்சாங்கம் கூறுகின்றது.

மேலே குறிப்பிட்ட மருத்து நீரை நாமே தயாரித்துக்கொள்ள வேண்டும். தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணு இராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு என்பவற்றைச் சுத்த சலத்திலிட்டுக் காய்ச்சுவதால் இம்மருத்து நீரைப் பெற்றுக் கொள்ளலாம்.

இக்காலத்திற் பெரும்பாலானேர் மேற்காட்டிய அம்சங்கள் முழுவதையும் வசதியீனங்கள் காரணமாக அனுசரிப்பதில்லையெனல் மிகையாது. மேலும் அநேகர் இவற்றை விரிவாகத் தெரிந்து கொள்வதுமில்லையென்றே சொல்லலாம்.

இவை எப்படியிருந்த போதும் வருஷப் பிறப்பைக் கொண்டாடும் ஆர்வம் இயற்கையாகவே யாவருக்கும் ஏற்படுகின்றது. நம் நாட்டில் இந்து சமயத்தவர்கள் மாத்திரமன்றி, பௌத்தர்களும் இத்தினத்தைக் கொண்டாடுகின்றனர். சிங்கள பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்க்கின் வருஷம் பிறக்கும் நேரம், இதர சுபவேளைகள் ஆதியனவும், அன்றைய தினத்தில் அணிய வேண்டிய ஆடையின் நிறங்களும் பிறவும் ஒரே மாதிரியாக இருப்பதைக் காணலாம். இவ்விரு மதத்தினர்க்கும், இவ்வித ஒற்றுமைகள் காணப்படுதல் வியப்புக்கும், ஆராய்ச்சிக்கும் உரியதாகும்.

பஞ்சாங்கத்திற் சொன்ன முறைகளை ஒரு சாரார் பின்பற்றி இத்திருநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடும் நோக்கில், சிலர் மனித இயல்புக்கு முற்றிலும் பொருத்தமற்ற செயல்களை இத்தினத்தில் புரிகின்றனர். புதுவருடப் பிறப்புக் கொலைகள், களவுகள் சம்பந்தமாக முன்னெச்சரிக்கையாக இருக்கும்படி ஏற்கெனவே பத்திரிகைகளில் காணப்பட்ட ஓர் செய்தியை வாசித்தபோது, சிலர் மனித இயல்பை இத்தினத்தில் மீற எத்தனிக்கின்றனர் என்பதையறிந்தே நாம் அவர்களது செயல்கள் பொருத்தமற்றதெனக் கருதுகின்ருேம். இவ்விஷயத்தைச் சற்றுச் சிந்தித்துப் பிழைபடா நடத்தல் நம் சிறப்பை மேனுமதிகரிப்பதொன்ருகும்.

சில மக்கள் தாம் தொடர்ந்து பின்பற்றி வரும் கெட்ட செயல்களைத் தாமே உணர்ந்து அவற்றை வருஷப் பிறப்புடன் விட்டு விடுவோமென்று தீர்மானித்துக்கொள்வதும் அங்ஙனம் செய்வதும் இயல்பு. நமது சுகவாழ்வுக்கும், செல்வ நிலைக்கும் பாதகமான குடிவெறி போன்ற தீய பழக்க வழக்கங்களை

[14 ம் பக்கம் பார்க்க.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானிலம் புகழ் நவரத்தினசாமி

திரைகடலை நீந்திக் கடந்தவரும் இன்று மக்களின் அன்புக் கடலினைத் தாண்டமுடியாது தத்தளித்துக்கொண்டிருப்பவருமான தமிழ்ப் புதல்வர் திரு. நவரத்தினசாமி அவர்களுக்கு எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

மலைபோன்ற அலைமோதும் மகா சமுத்திரத்தை மனோதைரியத்துடன் பிளந்து சென்று கரையேறிய இம்மானிடப் பிறவியைப்பற்றி எம் மனதிலெழும் மகிழ்ச்சிக்குக் கங்குமில்லை, கரையுமில்லை. திமிங்கிலங்கள், முதலைகள், வேளாச் சுறுக்கள், திருக்கைகள் போன்ற தீங்கிழைக்கக்கூடிய பல ஜெந்துக்களின் அக்கிரமங்களுக்குட்படாமலும், சுழி, நீரோட்டம், என்பவற்றால் துன்புறுத்தப்படாமலும் நீந்திச் சென்று தமது இலட்சியத்தைப் பூர்த்தி செய்த நவரத்தினசாமி அவர்கள் மகிழ்ச்சியின் சிகரத்தை எய்திவிட்டார். தன் கடமை முடிந்தது என்றும் திருப்திப்பட்டுவிட்டார். ஆனால் மக்களின் மகிழ்ச்சியலைகளோ புன்னகை பூத்தனவாய் பூலோகமெங்கும் புரண்டோடிக்கொண்டிருக்கின்றன. இவை இப்புவியுள்ளளவும் கரைகண்டு மடிதற்கில்லை.


உலகம் உண்டான காலந்தொட்டு இற்றைவரை சமுத்திரத்தை நீந்திக் கடக்கும் கைங்கரியத்தில் முன்னணியில் நிற்பவர் திரு. நவரத்தினசாமி அவர்கள். வல்வெட்டித்துறைக்கும் கோடிக்கரைக்குமிடையிலுள்ள **30** மைல்களுக்கதிகமான தூரத்தைக் கொண்ட பாக்கு நீரிணையை நீந்திக் கடப்பதற்கு **1954** ம் ஆண்டு மார்ச் மாதம் **26** ந் திகதி பிற்பகல் **4** மணியளவில் வல்வெட்டித்துறையிலிருந்து கடலில் இறங்கிய இவர் அடுத்த நாள் **27** ந் திகதி பிற்பகல் **7** மணியளவில் கோடிக்கரை போய்ச் சேர்ந்து ஒரு உலக சாதனையை நிலைநாட்டினார். இதனால் இவர் இன்று பெற்றுள்ள உலகப் பிரசித்தத்துக்கு இவரது மனோதைரியமே முக்கிய காரணமாகும். மனோதைரியம் விலைகொடுத்து வாங்கப்படுவதொன்றல்ல. இலட்சியமுள்ள எல்லா மக்களும் இதனைப் பெறுதல் சாத்தியமாகும். உலகத்தில் எவ்வளவோ கஷ்டங்களைப் பொறுத்து, சகிப்புத்தன்மையுடன் ஆராய்ச்சியிலீடுபட்டுழைக்கும் அரும்பெரும் விஞ்ஞானிகள், இமயம் தாண்டிய தென்சிங், பாக்கு நீரிணை தாண்டிய நவரத்தினசாமி ஆதியோர் தைரியத்தாலும், திட சங்கற்பங்களாலும் உலகத்தில் எல்லா விஷயங்களையும் சாதிக்கலாமென்ற உண்மையை நிரூபித்து விட்டார்கள். இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இத்தகைய உலக சாதனைகள் நிலைநாட்டப்படவேண்டுமென விழைகின்றோம்.

திரு. நவரத்தினசாமி அவர்களின் தீர சாதனை ஈழநாட்டு மக்களுக்கு விசேஷமாக தமிழ் மக்களுக்குப் பெருமையளிப்பதொன்றாகும். பண்டைக் காலத்தில் விறல் வேந்தர்களும், வீரத் தாய்மார்களும் சாதித்த தீரச் செயல்களையிட்டுப் பேசிப் பெருமைகொண்டு வந்த தமிழர், இப்போது தலை நிமிர்ந்து, மார்பு தட்டிப் பெருமை பேசுதற்குக் காரண புருஷராய் விளங்கும் நவரத்தினசாமி அவர்களுக்குத் தமிழகம் என்றும் கடமைபட்டுளது. இவர் ஈட்டியுள்ள பெரும்புகழ் உலகமுள்ளளவரை நிலைநிற்றற்குரிய கைங்கரியங்களை மேற்கொள்ள நாம் பாடுபடவேண்டும்.

ஒருவர் பிரசித்தமடைவதற்கு பணக்காரராயிருக்க வேண்டும், அரசியலில் இறங்கவேண்டும், மற்றவர்களைச் சூழ்ச்சியினால் வெல்ல வேண்டும் என்றெல்லாம் இக்காலத்தில் அநேகர் கொண்டுள்ள பல கருத்துக்கள் நவரத்தினசாமி அவர்களின் சாதனையால் மறைந்தொழிய வேண்டும். கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறந்த மானிடர் ஒவ்வொரு துறையிலும் விடாமுயற்சியுடன் உழைத்தால், ஒவ்வொரு வீட்டிலும் எத்தனையோ தென்சிங்குகளும் நவரத்தினசாமிகளும் தோன்றலாம் என்பதற்கையமில்லை.

நல்ல தைரியமும், விவேக புத்தியுமுள்ள எத்தனையோ மக்கள் தாங்கள் ஏழைகள் என்ற காரணத்தை முன்னிட்டு தங்கள் ஆற்றல்களை மறைத்து வைத்திருக்கிறார்கள். பணப் பெருக்கமும், உடலுறுதியும் அதிகமாகவுள்ள எத்தனையோ மனிதரால் சாதிக்கமுடியாத அருஞ்செயல்களைத் தென்சிங்கும் நவரத்தினசாமியும் போன்ற ஏழைகள் செய்து காட்டியமை, வறுமை காரணமாகத் தம் ஆற்றல்களை மறைத்து வைத்திருப்போரின் கண்களைத் திறக்க வேண்டும். இத்தகைய ஆற்றலுள்ள மக்களுக்கு ஊக்கமளிப்பதும் உதவி செய்வதும் ஏனைய மக்களின் கடமைகள் என்பதை நாம் வற்புறுத்த வேண்டியதில்லை.

**திரு. நவரத்தினசாமி அவர்கள் இந்தியக்கரையை அடைந்து எழுந்து நடந்தபோது இவ்விதம் காணப்பட்டார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலைமோதும் கடலைத் துரும்பென மதித்து ஆர்வத்துடன் நீந்திச் செல்கிறார்.

நமது புகழ்ச்சிக்குப் பாத்திரரான நவரத்தினசாமி அவர்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டின் தென்பகுதியிலுள்ள தொண்டமானாறு என்னும் ஊரில் 1909 ம் ஆண்டு ஆவணி மாதம் 16 ந் திகதி பிறந்தார். இவரது தந்தையார் முருகுப்பிள்ளையென அழைக்கப்பட்டார். 19 வது வயதில் அரசாங்க விவசாயப் பகுதியில் கடமையாற்றத் தொடங்கி இன்னும் அப்பகுதியிலேயே ஓர் போதகாசிரியராகக் கடமையாற்றும் இவர் மூன்று பிள்ளைகளின் அருமைத் தந்தையுமாவார். இவருக்கு அகில உலகிலும் ஏற்பட்டுள்ள கீர்த்தியை இவரது பெற்றோரும், மனைவியும் கண்டுகளிக்க முடியாது மறைந்தொழிந்தனரெனினும், இவர் புகழ் துய்க்க மூன்று பாலர்கள் இருப்பது ஆறுதலளிப்பதாகும். "என் தந்தை தவறினால், நான் இந்நீரிணையைக் கடப்பேன்" என்று இப்பாலகருள் ஒருவன் கூறியமை எந்தமிழ் மக்களின் திடசித்தத்தையும் மனோவல்லமையையும் உலகத்துக்கே எடுத்துக்காட்டுவதாயிருந்தது.

நவரத்தினசாமி அவர்களையும் அவரது புத்திரர்களையும் போன்ற திடசித்தமுள்ள மக்கள் எம் மத்தியில் தோன்றினால், நாம் எக்காரியத்திலும் முதலிடம் பெற்று எம் புகழ் தழைக்கச் செய்தல் சுலபமாகும்.

# "நீச்சல் வீரன் நவரத்தினசாமி"

(டி. எம். இராசலிங்கம்)

கல்வி கற்கும் காலந் தொட்டு நீந்துவதில் பயிற்சி பெற்று அதன் மூலம் பாக்கு ஜலசந்தியை நீந்திக் கடக்க வேண்டுமென்று 27 வருடமாகத் தமக்கிருந்த ஆசையை கடந்த மாதம் 26 ந் திகதி மாலை 7 மணிக்கு நிறைவேற்றி வெற்றியைச் சம்பாதித்ததோடு ஈழத்தின் புகழை இமயம் வரைக்கும் உயர்த்தியும் விட்டார் எங்கள் தமிழ்ப் புதல்வன் திரு. நவரத்தினசாமியவர்கள். ஈழநாட்டிற்குமட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரவியிருக்கும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் எல்லோர்க்கும் இச்செய்கை பெருமைதருமன்றோ!

இலங்கையின் அந்தஸ்த்தை உலக அரங்கில் உயர்த்திவிட்டதாக மந்திரிமார்களும் அரசியற் தலைவர்களும் அவரை வாழ்த்தினர். இலங்கையும் இந்தியாவும் தாய்நாடும் சேய் நாடும் என்று சொல்லப்படும் உண்மையையும் ஒரே மூச்சில் நீந்தி அக்கரை சேர்ந்து நிரூபித்து விட்டதாக இலங்கைவாழ் தமிழரும் இந்தியத் தமிழரும் ஒன்று சேர்ந்து பெருமிதமடைந்தனர். நாற்பத்து நான்கு வயது நிரம்பி, மூன்று குழந்தைகட்குத் தந்தையாகி வடமராட்சிப் பகுதிக் கிருஷிகப் போதகாசிரியராகும் திரு. நவரத்தினசாமியவர்கள் 24 வயதிலேயே இம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால் இங்கிலாந்துக்கே நீந்திச் சென்று இருப்பார் என வல்வெட்டித்துறையில் நடந்த ஓர் வரவேற்பின் போது நீதிமந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. வி. குமாரசாமியவர்கள் குறிப்பிட்டார்.

முதன் முதலாக சிறிய தூரங்களை நீந்தி யனுபவம் பெற்ற திரு. நவரத்னசாமியவர்கள் மார்ச் மாதம் 16 ந் தேதி முதல் பாக்குத் தொடுவாயை நீந்திக் கடக்கும் முயற்சியை ஆரம்பித்தார். வெளிநாட்டு விவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. வி. நல்லையா அவர்கள் அவரை வழியனுப்பி வைத்தார்.


தொடர்ந்தேர்ச்சியாக 24 மணித்தியாலங்கள் நீந்திய பின் இயற்கையின் சீற்றத்திற்காளாகி கொந்தளிக்கும் அலைகளையும் கோரமான காற்றையும் வேகமான நீரோட்டத்தையும் எதிர்க்க முடியாது இயற்கைக்குத் தலைவணங்கி தமது முயற்சியைக் கைவிடும்படி நேரிட்டது. புறப்பட்ட இடமாகிய வல்வெட்டித் துறைக்கு திரும்பிவந்து சேர்ந்தபோது இயற்கை தன்னை வஞ்சித்து விட்டதாகக் கூறி, மீண்டும் முயற்சிப்பேன், முயற்சியில் வெற்றியும் காண்பேன் என உறுதி கூறினார்.

மீண்டும் ஒன்பது நாட்களின் பின் மார்ச் மாதம் 25 ம் திகதி நாலு மணிக்குத் தனது முயற்சியில் ஈடுபட்டார். 2,500 க்கு மேற்பட்ட மக்களும் பகுதிப் பிரதிநிதி திரு. டீ. இராமலிங்கம் அவர்களும் அசைஸ் கொமிஷனர் திரு. பார் குமாரகுலசிங்கமவர்களும் அவரை இன்முகத்துடன் வழியனுப்பிவைத்தார்கள். இரண்டாவது தடவையும் இயற்கையின் சோதனைகள் பல இடங்களிலும் அவரை பதம்பார்ப்பதில்தவறிவிடவில்லை. கைலையின் இருக்கை கண்டல்லால் இவ்வுடல் கொண்டு மீளேன் என்று கூறிய நாவுக்கரசர் போல் கோடிக்கரையில் விருந்துண்டல்லால் இவ்வுடல் கொண்டு மீளேன் என்று கூறிச் சென்றார் நவீன நாவுக்கரசர். கரைதெரியாது கூடச் சென்றவர்கள் கலங்கிய போதும் கையிலே கடற் பாம்பு இறுக்கச் சுற்றியபோதும் சற்றேனும் மனம்தளராது தனது உடலில் ஓடுவது உண்மைத் தமிழ் இரத்தம் என்பதை கோடிக்கரைத் தரையில் காலைப் பதியவைத்து நிரூபித்துவிட்டார். 26 ந் திகதி மாலை 7 மணிக்கு கரைசேர்ந்த நவரத்னசாமி அவர்களை 4,000 க்கு மேற்பட்ட மக்கள் மங்கும் இருளிலே மகிழ்ச்சியோடுவரவேற்றார்கள் அடுத்த நாள்காலை காலையிலும் மாலையிலும் கோடிக்கரை வேதாரணியம் முதலாம் இடங்களில் அவருக்கு சிறந்த வரவேற்புக்கள் அளிக்கப்பட்டதோடு இலங்கை வாழ் தமிழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேதாரணியத்தில் வரவேற்பு



வல்வெட்டித்துறையிலிருந்து நீந்தப் புறப்பட்டபோது அவரை வழியனுப்பி வைத்த பிரமுகர்கள்.

என நவரத்தினசாமியவர்களை வாழ்த்தினர்கள். 28 ந் திகதி மாலை $6\frac{1}{2}$ மணிக்கு வல்வெட்டித் துறைக்கு வந்து சேர்ந்த திரு. நவரத்தினசாமியவர்களை வரவேற்க சேர். கந்தையா வைத்திய நாதன், திரு. வி. நல்லையா, திரு. வீ. குமாரசாமி, திரு. உ. இராமலிங்கம், டாக்டர் என். எம். பெரேரா, மாகாண அதிபர் திரு. பி. எ. ஹட்சன் முதலான பல பிரமுகர்களும் அலைகடல்போல் அகன்ற ஜனத் திரளும் கூடி இருந்தது. அவரைப் பாராட்டிப் பேசிய பலர் "சமுத்திர குமாரன்" என்றும் "கலியுக மாருதி" என்றும் "கடல்கடந்த தமிழன்" என்றும் பலபடப் புகழ்ந்தார்கள். அன்றைய தினம் வல்வெட்டித்துறைப் பட்டினச் சங்கத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் அவர்களது தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் பல வெற்றிக் கிண்ணங்களும் வரவேற்புப் பத்திரங்களும் வழங்கப்பட்டபின் அவரது இல்லம் வரைக்கும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அன்று தொடக்கம் இன்றுவரைக்கும் பருத்தித் துறை யாழ்ப்பாணம் திருநெல்வேலி கரவெட்டி முதலாம் இடங்களில் மாபெரும் வரவேற்புகள் நடைபெற்றதோடு இன்னும் எத்தனையோ வரவேற்புகள் நடைபெற இருப்பதாகத் தெரிகிறது.

நடைபெற்ற வரவேற்புக்களின் போதெல்லாம் கூடிவந்த மக்களின் தொகை தமிழ் மக்கள், வீரத்தை மதிப்பதை உலகறியச் செய்துவிட்டது.

தமிழரிடையே இன்றைக்கு 5,000 ஆண்டுகட்குமுன் தொட்டு இருந்துவந்த வீரம் இன்னமும் மறைந்துவிடவில்லை என்பதை திரு. நவரத்தினசாமியவர்களின் சாதனை எடுத்துக்காட்டிவிட்டது என்பதைப் பெருமையோடு பலர் குறிப்பிட்டார்கள்.

இச் செய்கை உறங்கிக் கிடக்கும் தமிழகத்தைத் தட்டி எழுப்பும் என நம்புவதோடு இதை ஆதாரமாகக் கொண்டு மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசும் பழக்கத்தை ஒழித்து பிற நாட்டார் நம் வீரத்தை வணங்கும் அளவிற்குப் பலமான உறுதியும் திடகாத்திரமும் சேவைக்காகத் சுகத்தை தியாகம் செய்யும் பண்பும் உடைய இளைஞர் தோற்றத்திற்கு உதவவேண்டும் எனவும் இறைவனை வேண்டுவாம்.

## மறப்புகழ் நீச்சல் மன்னன்


(மகேஸ்வரன்)

உன்னத இமயம் என்ற
உச்சியில் ஊர்ந்து ஏறி
மண்ணவர் எவர்க்கு மில்லா
மறப்புகழ் கொண்டான் "தென்சிங்"
அன்னவர்க் கிணையாய்ப் * பாக்கு
அலைகடல் அகழி நீந்தி
எண்ணரும் புகழ டைந்தான்
எம். நவ ரத்ன சாமி !

"எண்ணிய எண்ணி யாங்கு
எய்துப எண்ணி யார்கள்
திண்ணிய ராகின்" என்ற
திருக்குறள் வினைத்திட் பத்தின்
உண்மைநல் லெடுத்துக் காட்டாய்
உலகிடை "நீச்சல் மன்னன்"
என்னுமோர் பேரெடுத்தான்
எம் நவ ரத்ன சாமி !

* பாக்கு நீரிணையைக் குறிக்கும்

திருநெல்வேலியில் அமோக வரவேற்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியம் வாழ்வு என்ற
இருதலை விலாங்கு ஆகி
அலட்சியப் போக்கிற் செல்லும்
அவனியின் அஞ்ஞா னத்தை
விலக்கிட வந்த ஞான
மேதைபோல் நீச்ச லுக்கோர்
இலட்சிய விளக்க மானன்
எம் நவரத்ன சாமி !

பாண்டிய சோழ சேரர்
பாரர சாண்ட நாளில்
தோன்றிய வீர சக்தி
தொண்டைமா னாற்றில் இன்று
ஈண்டிய தென்ன வந்த
எம். நவ ரத்ன சாமி
மாண்புடன் நாட்டி னுக்கும்
மறப்புகழ் தந்தான் : வாழி !

(ஈழகேசரி)

## மாருதி நவரத்தினசாமி

(சோதி)

வாரிதியைக் கடந்தந் நாள் மங்கையினைத்
தரிசிப்ப வந்த வேந்து
சீரிலங்கை வளங்கண்டு திரும்பியது
யாமறிந்த செய்தி யல்லால்
நேரிலறிந் துரைத்ததல்ல ; நினைப்பிதனை
யுட்கொண்டே நிலைமை மாற்ற
மாருதியாய் நவரத்ன சாமியின்று
தமிழ் மகனாய் வளர்ந்தா னன்றே.

மங்கை யவள் தனைமீட்ட வரலாறும்
இராகவனின் அரசு மாண்பும்
செங்கையவள் ஜானகியின் திறங்கேட்டும்
நம்மவர்க்குச் சேதி சொல்லும்
பங்கினிலே இன்று சிறு தூதுவனாய்
மாருதிபோற் பரவை நீந்திச்
சங்கை பெற இனிதளித்தான் சாமிநவ
ரத்தின மாம் தகைமை யோனே !

வாரிதியும் பெருங்காற்றும் வரு சுறவும்
உன் தோளின் வண்ணங்கண்டும்
பேரிதயம் படைத்தவனே ! பிறக்கிட்டா
யில்லையினி உன்னை நாமோ
சீரிலங்கு சாமியெனப் பெயர்கொண்டு
அழைக்க விடோம் திசைகள் எங்கும்
மாருதியே ! என அழைப்போம் வையமெலாம்
உன்கீர்த்தி மலிந்து வாழி !

## இரண்டாவது எலிசபெத் மகாராணியின் வாழ்க்கையிற் சில முக்கிய சம்பவங்கள்

[9 ம் பக்கத்தொடர்ச்சி]

இவ்விளந் தம்பதிகள் கிழக்கு ஆப்பிரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்வதற்காக 1952 ம் ஆண்டு ஜனவரி மாதம் லண்டன் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்கள். இவ்விருவரையும் வழியனுப்பச் சென்றிருந்த மன்னர் பிரான் மிகவும் சோர்வுற்றுக் காணப்பட்டார்.

சில தினங்களுக்குப் பின் பிலிப் இளவரசர் தமது மனைவியாருடன் கெனியா மக்களால் தங்களுக்கு திருமண வெகுமதியாக அளிக்கப்பட்ட வாசஸ்தலத்தின் நந்தவனத்தில் உலாவுவதற்காகச் சென்றார்

உலகை அதிரச் செய்த ஒரு செய்தியை பிலிப் இளவரசர் தம் மனைவிக்கு அறிவித்தார்.

இக்குடியேற்ற நாட்டுக்கு மிகவும் குதூகலத்துடன் ஒரு சில தினங்களுக்கு முன் வந்து சேர்ந்த இளவரசி துக்கசாகரத்தில் மூழ்கியவராய், நாடாளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும் பொதுநலக் குடியரசின் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கவும் அன்று மத்தியானமே விமானத்தில் நாடுதிரும்பினார். 1953 ம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாவது எலிசபெத் மகாராணியாரின் முடிசூட்டு விழா அதிவிமரிசையாக நடைபெற்றது. பொதுநலக் குடியமைப்பு நாடுகள் யாவும் தங்கள் ஆசியைத் தெரிவித்தன.

## வருஷப் பிறப்பு


[10 ம் பக்கத் தொடர்ச்சி.]

நம்மில் அநேகர் இப்புது வருடத்துடன் கைவிட்டு விடலாம். இவற்றை புதுவருடத்திலன்று தான் கைவிடலாமென்ற நியதியில்லை. இருந்தாலும் சிலரின் மனதைக் கட்டுப்படுத்தக்கூடிய ஓர் விசித்திர சக்தி புதுவருடத்திற்குண்டு.

மாரி காலத்தில் நெல் விதைத்து மாசி, பங்குனியில் அறுவடை செய்து, நெல்லைக் கூடைகளில் வைத்த பின்னர், வசந்த காலத்தைச் சந்தோஷமாகக் கழிக்கும் இயல்புடையவர்கள் தமிழர். எனவே வசந்த காலத்தில் வருடப் பிறப்பையும் கொண்டாடும் வழக்கத்தைக் கையாண்டனர். இப்புனித தினத்தன்று மக்கள் உள்ளம் பூரித்துப் பல ஆடல் பாடல்களிலும் ஈடுபடுவது வழக்கம். போர்த்தேங்காய் அடித்தல், ஊஞ்சல் கட்டி ஆடுதல், பாக்குக் கட்டுதல், கிளித்தட்டு விளையாடல், கிட்டி அடித்தல் முதலிய தேசிய விளையாட்டுக்கள் புதுவருடப் பிறப்புடன் ஆரம்பமாகும். இவற்றில் இளையாரும் முதியோரும் பங்கு பற்றுவார்கள். இலங்கை சுதந்திரமடைந்தும், தேசிய விளையாட்டுக்கள் புத்துயிர் பெறவில்லை யென்றே சொல்லலாம்.

வெகு குதூகலமாய் வருஷப் பிறப்பைக் கொண்டாடி நம் ஈழத் தாயைப் பல்வேறு விஷயங்களிலும் மகிழ்விக்கின்ற நமக்கு, அநேக ஆண்டுகளாகப் பல உதவிகளைச் செய்து நம்மைக் காத்து வந்த பிரித்தானியரின் வம்சத்தினுதித்த எலிசபெத் மகாராணியாரையும் அவர் கணவரையும் அன்புடன் வரவேற்றுபசரிக்கும் பாக்கியம் புதுவருடப் பிறப்புடன் கிடைத்துள்ளது. இப்புதிய ஜய வருஷத்தில் சகல வெற்றிகளையும் ஈட்டுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டித் தெப்பக் குளமும் தலதா மாளிகையும்

# கண்டி தலதா மாளிகை

கண்டிக் குளத்திற்கு வடக்கே காணப்படும் பௌத்த கோயிலை சிங்களத்தில் "தலதா மாளிகை" என அழைக்கின்றனர். கௌதம புத்தரின் இடது கண்ணிற்கு நேராக விருந்த பல்லை இங்கு அடக்கஞ்செய்திருப்பதால், இது இலங்கையின் பிரதான பௌத்த ஆலயமாக விளங்குகின்றது. இதனைப் புனித தந்தக் கோயில் எனலாம்.

புத்தரின் பரிசுத்த தந்தம் விசேட காலங்களில் மாத்திரமே பக்தர்களின் தரிசனைக்கு வைக்கப்படுகின்றது.

17 ம் நூற்றுண்டிலே இலங்கையில் ஆட்சி செலுத்திய விமலதர்மசூரியன் இதனைக் கட்டியதாக பௌத்தகுருமார் கூறுகின்றனர். இம் மன்னனின் தந்தை டச்சுக்காரரை இலங்கைக்கு வரவழைத்தான். விமலதர்மசூரியனின் மகனுன ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் காலத்தில் இக் கோயில் சிதைந்து கிடந்ததெனவும், இம் மன்னன் முன்னர் மூன்று மாடிகளுடன் திகழ்ந்த இதனை இரண்டுமாடியுடையதாகத் திருத்தி யமைத்தான் எனவும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இதன் பின்னர் திருத்தங்கள் நடைபெற்றதாக இந்நூலில் குறிப்பிடப்படவில்லை. புதிய விக்கிரக அறையின் தள அமைப்பு பழைய அறையின் அமைப்பைப் போன்றே காணப்படுகின்றது பார்த்திருப்பு மண்டபமும் அகழியும் கடைசிக் கண்டி மன்னனால் எழுப்பப்பட்டன.

இத்தலதா மாளிகை புராதன அரண்மனையின் தென் கோடியிலே அதே வரிசையில் அமைந்திருக்கிறது. இக்கோயிலின் எதிர்ப்புறத்தில், பாதைக்கு அப்பால் நாத தேவரின் ஆலயங்களும், விக்கிரக அறைகளுடன் கூடிய இரு அரச மரங்களும், இரு தாகபைகளும் காட்சியளிக்கின்றன. அரண்மனைக்குப் பின்புறத்தில், தலதா மாளிகைக்கு வடக்கே அத்தாணி மண்டபம் திகழ்கின்றது. இவ்விதமாக இக்கோயில், அரண்மனைக் கட்டிடங்களுக்கிடையே திகழ்வது கவனிக்கத்தக்க தொன்றுகும்.

அரண்மனைக்கும், கோயிலுக்குமாக வமைந்துள்ள தோரண வாசல் வழியாக சிங்கள அலங்கார வேலைப்பாட்டு முறையிலமைந்த செங்கற் சுவரொன்று செல்கின்றது. இச்சுவரில் விழாக் காலங்களில் தீபங்களேற்றுவதற்காக இடையிடையே குழிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன,

(26 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி விஜயலட்சுமி பண்டிட் தமது புத்திரிகள் சகிதம் கொழும்பு விவேகானந்த வித்தியாசாலை மண்டபத்துள் வந்தபோது எடுக்கப்பட்ட படம். உணவுப் பகுதி நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அன்னாரை அழைத்துச் சென்றார்.

# திருமதி விஜயலட்சுமி பண்டிட் அவர்களின் இலங்கை வருகை

ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் தலைவியும், இந்தியப் பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேருவின் சகோதரியும், இந்திய மாதர் திலகமுமான திருமதி விஜயலட்சுமி பண்டிட் இலங்கைப் பிரதமரின் அழைப்பிற்கிணங்கி மார்ச்சு மாதம் 15 ந் திகதி எயர் இந்தியா விமானத்தில் ரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கினார். விமான நிலையத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களின் பலத்த கரகோஷத்திற்கிடையே இலங்கைப் பிரதமர் சர். ஜோன் கொத்தலாவலை அவர்களால் வரவேற்கப்பட்டார். அம்மையார் இலங்கையில் அடியெடுத்து வைத்தநாள் தொடங்கி 22 ந் திகதி சென்னை நோக்கிச் சென்ற நாள்வரை இலங்கையின் பலதிறப்பட்ட பொதுஸ்தாபனங்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும், மாதர் கழகங்களுக்கும் சென்று பல சொற்பொழிவுகளாற்றியுள்ளார்.

கொழும்பில் சைவமங்கையர்கழகத்திற்கும், தமிழ்க் கலாசாரக் கழகத்திற்கும் தமிழ் மாதர் யூனியனுக்கும் விஜயஞ் செய்ததோடல்லாமல், விவேகானந்த சபைப் பொன் விழாவையும் ஆரம்பித்து வைத்தார்,

ஆங்கிலத்திலே வெகுசரளமாகப் பேசும் ஆற்றல் வாய்ந்த திருமதி பண்டிட் இலங்கை மாதர்களுக்கு விடுத்த செய்திகள் பல. ஆடம்பரமற்ற உடையில், வசீகரப் பொலிவுடன் தோற்றமளிக்கும் திருமதி பண்டிட் இலங்கையில் பல விடங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளின் துணுக்குகள் கீழே தரப்படுகின்றன.

மார்ச்சு மாதம் 16 ந் திகதி மாலை 4 மணிக்கு தமிழ்க் கலாசார சங்கத்தின் ஆதரவில் கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திருமதி பண்டிட் ஐ. நா. சபை மூலமே சமாதானம் தழைக்க முடியுமெனவும், இச் சபையில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டுமெனவும் கூறி சிறுபான்மையோர்களுக்கு போதிய பாதுகாப்புகள் அளித்து பெரும்பான்மை வகுப்பினர் நேர்மையாக நடப்பதே ஜனநாயக ஆட்சியெனவும் இதனை தென்னாபிரிக்கா உணரவில்லையெனவும் பெரும்பான்மையான சுதேச மக்களை சிறுதொகை வெள்ளையர் அடக்கியாள விரும்புகிறார்களெனவும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை 6 மணிக்கு விவேகானந்த சபையின் பொன் விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது :—

“ விவேகானந்தர் சமயத்துக்காக மட்டும் உழைத்தவரல்லர். அவர் நவபாரதத்தின் சுதந்திரத்துக்காகப் போரிட்ட சிறந்த போர்வீரரும் ஆவார். அவருடைய பெயரைப் பெருமையுடன் நினைவுகூராத இந்தியர் எவரும் இருக்க முடியாது. இந்தியாவின் கொள்கையை வெளிநாடுகளில் மிகச் சிறந்த அரசியல் மதியூகத்துடன் எடுத்துக் கூறிய பெருமை விவேகானந்தரைச்சாரும். ”

“ குறுகிய தேசிய எல்லைகளுக்குள் இன்று நாம் கட்டுப்பட வேண்டியதில்லை. உலகம் இன்று வெகுவாகக் குறுகியுள்ளது. எனவே உலக மக்கள் அத்தனை பேருடைய சுதந்திர வாழ்க்கைக்காவும் நாம் உழைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். சுவாமி விவேகானந்தரின் திருநாமம் மனித குலத்தின் விடுதலைக்காக நாம் நடத்தும் போராட்டத்தில் கேடயமாக அமைய வேண்டும். அவர் நாமம் பூண்ட இச்சபையின் பொன் விழாவைத் தொடக்கிவைப்பது குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியுறுகிறேன்.

கண்டி நகர மண்டபத்தில் பொதுமக்கள் வரவேற்பிக்குப் பதிலளித்த திருமதி பண்டிட் இவ்விதம் கூறினார்.

“ இந்நாட்டு மக்களிடையே அதிக விழிப்புணர்ச்சி இருப்பது கண்டு மனமகிழ்ச்சியடைகின்றேன். எமது செயல்களெல்லாம் எமது கலாசாரத்தையும், வாழ்க்கை முறையையுமே அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இச் செயல் முறைகள் புத்த பிரானின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படல் வேண்டும். ”

கொழும்பு சைவமங்கையர் கழகத்தின் குதூகலவரவேற்பில் கலந்து கொண்ட திருமதி பண்டிட், வரவேற்பிற்குப் பதிலளிக்கையில் இவ்விதம் குறிப்பிட்டார் :—

“ நம்மிரு நாடுகளுக்குமிடையிலுள்ள ஒற்றுமையான அம்சங்கள் பல. அவற்றை நோக்கும் பொழுது இவ்விரு நாட்டு மக்களும் வெவ்வேறு சமுதாயத்தினராயில்லாமல் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்களென்றே நினைக்கத் தோன்றுகின்றது. நமது பிரச்னைகள் ஒரே மாதிரியானவை. இளம் பெண்களாகிய நீங்கள் பள்ளிக்கூடத்திலிருந்தாலும் சரி, வீட்டிலிருந்தாலும் சரி, சமுதாயத் துறைகளில் ஈடுபட்டிருந்தாலும் சரி, அவ்வத் துறைகளிலே நீங்கள் பணியாற்றி நாட்டு நலனுக்குப் பாடுபட வேண்டிய காலம் வந்து விட்டது.

**ஆசியாவின் வருங்காலம் இன்றைய இளம் பெண்களான உங்கள் கையிலிருக்கிறது, நாம் அனைவரும் கனவு காணும் புதிய ஆசியாவை நிருமாணிக்க வேண்டிய சிற்பிகள் நீங்கள்தான்.**

பள்ளிப் படிப்பு, முடிந்தவுடன் உங்களுடைய பொறுப்பு முடிந்துவிடவில்லை. சிறுவாதில் பெற்றோர்களுடனும், வயது வந்தபின் கணவன்மார்களுடனும் சமமாகப் பொறுப்பேற்று சமூகப்பணியாற்றுவதில் நீங்கள் ஊக்கமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

மார்ச் மாதம் 21 ந் திகதி இரவு 8 மணிக்கு வானொலி மூலம் தனது பிரியாவிடைச் செய்தியை இலங்கை மக்களுக்கு ஐ. நா. சபைத் தலைவி விடுத்தார். அப்பொழுது அவர் கூறியதாவது :—

“ நாட்டைச் சுற்றிப் பார்த்த பொழுது இயற்கையின் அழகும், நாட்டின் விருத்திக்காகப் புதிய திட்டங்களை நடத்தி வைப்பதில் அரசாங்கமும் பொதுமக்களும் ஒத்துழைப்பதும் எனது கவனத்தை ஈர்த்துள்ளன. ஆண், பெண் சமத்துவத்தைத் தக்கபடி பயன்படுத்த வேண்டுமாயின் அச்சமத்துவத்தின் விளைவாக ஏற்படும் பொறுப்பை பகிர்ந்து கொள்ளவும் பெண்கள் தயாராயிருத்தல் வேண்டும். இதனை இலங்கைப் பெண்மணிகள் நன்கு உணர்ந்திருப்பதற்கு அவர்கள் செய்துவரும் நிர்மாணவேலைகளே அத்தாட்சியாகும். ”

“ கலாலயத்தின் சேவையைக் கண்டு நான் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேனென்பதை விசேடமாக இங்கு குறிப்பிட வேண்டும். உங்களுடைய கலாசாரத்தை மறுமலர்ச்சியடையச் செய்வதன் மூலம் உங்கள் குழந்தைகளின் வாழ்க்கையைச் சந்தோஷமாக்குவதோடு உங்கள் இல்லங்களையும் ஆனந்தம் நிரம்பியனவாகச் செய்வீர்கள். உங்கள் பாரம்பரியம், சங்கீதம், நடனம் முதலான அருங்கலைகளை அடிப்படையாகக் கொண்டது. இப்பாரம்பரியம் உங்களுக்கு மூலபலனளிப்பதாயிருக்குமென்பதோடு இலங்கைக்கும் இதர நாடுகளுக்குமிடையில் ஒரு பாலமமைப்பது போலவுமிருக்குமாதலால் இதனை நீங்கள் பாதுகாக்கவேண்டும். உங்களுக்கு சர்வ மங்களங்களும் உண்டாகட்டும்.”

கொழும்பு சைவமங்கையர் கழகத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது திருமதி. விஜயலட்சுமி தரையில் விரிக்கப்பட்ட கம்பளத்தின் மீது அமர்ந்திருந்த காட்சி. கழகத்தின் மனேஜர் ஸ்ரீமதி சதாசிவம் அருகில் நின்று கொண்டிருப்பதைக் காண்க.



சைவமங்கையர் கழகத்தில் குழுமியிருந்த நூற்றுக்கணக்கான பெண்கள் மத்தியில் பண்டிட் விஜயலட்சுமி சொற் பொழிவாற்றினர். வலது புறத்தில் அன்னாரின் புத்திரிகளும் இடது புறத்தில் கழகத்தின் தலைமை ஆசிரியை செல்வி என். காசிப்பிள்ளையும் அமர்ந்திருப்பதைக் காண்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் காரியாலய உத்தியோகத்தர்கள். ஹைகமிஷனர் திரு. ஜே. ஏ. மாட்டின்ஸ் அவர்கள் இடது கோடியில் நிற்கிறார்.

# வெளிநாடுகளிலுள்ள இலங்கை ஸ்தானீகராலயங்கள்

## (7)—அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை ஸ்தானீகராலயம் 1949 ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. திரு. ஜே. ஏ. மாட்டின்ஸ் முதலாவது ஹைகமிஷனராக அங்கு நியமிக்கப்பட்டார்.

இந்த ஸ்தானீகராலயத்தின் தலைமைக் கந்தோர்கள் ஆரம்பத்தில் சிட்னியிலிருந்தன. ஆனால் ஹைகமிஷனர் தங்குதற்கும், காரியாலயங்களை அமைக்கவும் போதிய இடம் கன்பறுவில் கிடைத்த பொழுது, ஸ்தானீகராலயம் அச்சமஷ்டித் தலைநகருக்கு மாற்றப்பட்டது.

சகல தலைப்பட்டினங்களையும் போன்று கன்பறுவும் யுத்தத்துக்குப்பிந்திய காலத்தில் அதிகரித்துக் கொண்டிருந்த பல சிக்கல்களுக்குட்பட்டதெனினும், வீட்டுப் பிரச்னை யாவற்றையும் விட மிக மோசமான நிலையிலிருந்தது. இது காரணமாக 1952 ம் ஆண்டு ஏப்ரில் மாதத்தில் தான் "ட்றவல் லொட்ஜ்" என அழைக்கப்பட்ட ஓர் கட்டிடத்தை இலங்கை அரசாங்கம் வாங்கியது. குடிசனம் நிறைந்த பகுதியில் உள்ளதும் போதிய இடவசதியுடையதுமான இக்கட்டிடம், ஆரம்பத்தில் ஒரு பிரத்தியேக ஆஸ்பத்திரிக்கெனக் கட்டப்பட்டுப் பின்பு ஒரு ஹோட்டலாக உபயோகிக்கப்பட்டதெனினும் இப்போது ஸ்தானீகராலயமாகவும் இலங்கை உத்தியோகஸ்தர்களின் வசிப்பிடமாகவும் மாற்றப்பட்டுள்ளது.

ஹைகமிஷனர் வசிக்கும் இல்லம் ஆரம்பத்தில் குத்தகைக்கு எடுக்கப்பட்டது. இப்போது அக்கட்டிடமும் விலைக்கு வாங்கப்பட்டிருப்பதுடன் ஹைகமிஷனரின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் பல திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவுக்கு ஆசிய நாடுகள் அண்மையிலிருப்பதையும், இந்த நாடுகளுக்கும் அவுஸ்திரேலியாவுக்கு மிடையிலுள்ள நெருங்கிய பிரதேசத் தொடர்புகளையும் அவுஸ்திரேலிய இராஜதந்திரிகள் மாத்திரமன்றி சாதாரண மக்களும் அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக உணர்ந்து வருகின்றனரென்பது கடந்த சில வருடங்களாக வெளிப்படையாகி வருகின்றது. கீழ்த்திசையில் அநேக படைமுகாம்களில் சேவை செய்த பெருந்தொகையினரான அவுஸ்திரேலிய யுத்தவீரர்கள், இரண்டாவது உலக மகாயுத்த இருளிலே மாத்திரம் தாம் கண்ட அந் நாடுகளைப் பற்றி அதிக விஷயங்களை அறிவதற்கு இப்போது மிக ஆவலுடையோராயிருக்கின்றனர். இதைவிட, பொதுநலக் கொள்கைகளையுடைய இலங்கைத் தீவை ஒரு சகோதர நாடென்று மதிக்கும் அளவிடக்கூடாத நல்லெண்ணம் அங்கு நிலவுகின்றது.

இந்த நல்லெண்ணத்தை ஸ்திரப்படுத்துவதும் தொடர்ந்து நிலவச் செய்வதும் அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை ஸ்தானீகராலயத்தின் முக்கிய கடமைகளுள் ஒன்ருகும். கடந்த வருடத்தில் மாத்திரம் 500 பேருக்கதிகமானேர் இலங்கையைப் பற்றிய புத்தகங்களை விரும்பி இந்த ஸ்தானீகராலயத்துக்கு மனுச் செய்ததன் பேரில், அவுஸ்திரேலியாவெங்கும் இலங்கையைச் சித்தரிக்கும் சிறந்த புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன. இலங்கையைப்பற்றிப் பொதுவாகப் பேசுமாறு அல்லது இலங்கையின் முயற்சிகளுள் குறிப்பிட்டவொன்றையிட்டுப் பேசுமாறு கிடைக்கும் அழைப்புகள் எல்லாம் ஹைகமிஷனரால் அல்லது உத்தியோக பூர்வமான காரியதரிசியால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், பெருந்திரளான மக்கள் ஆவலுடன் குழுமியிருக்கும் நிலையங்கள் ஒவ்வொன்றிலும் இலங்கையையிட்ட சலனப்படங்களும் காட்டப்படுகின்றன. விவாதத்துக்குரிய பிரச்னைகளில் இலங்கை பங்குபற்றும் மாதிரியையிட்டு எழும் தப்பபிப்பிராயங்களைச் சில தடவைகளில் போக்கடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதுடன் இலங்கையின் கொள்கையை விளக்கி வெளியிடப்படும் உத்தியோகபூர்வமான அறிக்கைகளுக்கு பரந்த பிரசித்தமளிப்பதன் மூலம் இவ்வேலை மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கையையிட்டு அவுஸ்திரேலியர்களுக்கு விளக்குமளவில் மாத்திரம் ஹைகமிஷனரின் கடமை நின்றுவிடவில்லை. அவுஸ்திரேலியாவில் நிகழும் சம்பவங்களைக் கவனித்து, அவுஸ்திரேலியாவைப்பற்றியும் அதன் கொள்கைகளைப் பற்றியும் எங்கள் அரசாங்கத்துக்கு விளக்குவதும் ஹைகமிஷனரின் கடமையாகும். இது அரசியல், விவசாயம், வர்த்தகம், ஒவ்வொரு துறைகளிலும் ஏற்படும் அபிவிருத்தி, மனப்போக்கு என்பனபோன்ற கரிசனையளிக்கும் ஒவ்வொரு விஷயங்களையும் கொண்ட அறிக்கைகளைக் காலத்துக்குக் காலம் சமர்ப்பிப்பதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

### வர்த்தகத் தொடர்புகளைப் பெருக்கல்

வர்த்தகக் கமிஷனர் ஒருவர் இல்லாதபடியால், சகல வர்த்தக வேலைகளும் ஹைகமிஷனுலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அவுஸ்திரேலியாவின் மத்திய வர்த்தக ஸ்தாபனங்களுக்கு வெகு தூரத்தில் கன்பரு நகர் இருப்பதால், வர்த்தகர்களுடன் நேரடியான தொடர்பு வைத்தல் சாத்தியமாகாவிடினும், இரு நாடுகளிலுமுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் ஒன்றேடொன்று தொடர்பு வைத்துக்கொள்வதற்கு உதவியளிப்பதன் மூலம் இரு நாட்டு வர்த்தகத்தையும் அபிவிருத்தி செய்தற்கு தீவிர நடவடிக்கையெடுக்கப்படுகிறது.

தேயிலையின் முக்கியத்துவத்தைப் பரப்புவதில் இந்த ஸ்தானீகராலயம் தேயிலைப் பிரசார நிலையத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு செயலாற்றுகிறது. தேயிலைப் பிரசார நிலையத்தின் முக்கிய வேலை தேயிலை விற்பனையை விஸ்தரிப்பதே யெனினும், இங்கு வரும் மக்கள் தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடுகளைப் பற்றி அதிகமறிய ஆவல் கொண்டிருப்பதையும் அது கவனித்துள்ளது. எனவே இலங்கையைத் தரிசிக்கும்படி மக்களைத் தூண்டுவதற்கும் இச் சந்தர்ப்பம் பயன்படுத்தப்படுகிறது.

இப்பிரசார நிலையம் "தேயிலை வாரத்தை ஒழுங்கு செய்யும் ஒவ்வொரு தருணத்திலும் இலங்கைக் கைப்பணிப் பொருட்காட்சியொன்றும், சலனப்படக் காட்சி யொன்றும் இடம்பெறுகின்றன. அத்துடன் பெருந்தொகையான யாத்திரீகர்களுக்கு, யாத்திரை சம்பந்தமான விளக்கப் புத்தகங்களும் விநியோகிக்கப்படுகின்றன. இந்த முறையில், அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை அரசாங்க யாத்திரீகர் தகவல் நிலையத்தின் பிரச்சார வேலை பூரணமாக மேற்கொள்ளப்படுகின்றது. இதனுல் இலங்கைக்கு வரும் அவுஸ்திரேலியர்களின் தொகை ஏற்கெனவே அதிகரித்துள்ளது.

இலங்கைக் கைப்பணிப் பொருட்கள் இந்தச் சந்தர்ப்பங்களில் மாத்திரமன்றி கடந்த மூன்று வருடங்களாக அவுஸ்திரேலிய தலைநகரங்களிலெல்லாம் காட்சிக்கு வைக்கப்பட்டன. கடைசியாக நடைபெற்ற காட்சி கன்பரு நகரில் இடம்பெற்றது. கொழும்புத் திட்டத்திற் சேர்ந்த சகல நாடுகளும் அதில் பங்குபற்றித் தமது கலை, கைப்பணிப் பொருட்களைக் காட்சிக்கு வைத்தன. இலங்கைக் காட்சிப் பொருட்கள் பலராலும் நன்கு போற்றப்பட்டன.

### ஸ்தானீகர்

1885 ம் ஆண்டிற் பிறந்த திரு. மாட்டின்ஸ் அவர்கள் கொழும்பு, றேயல் கல்லூரியில் கல்வி கற்ருர். 1908 ம் ஆண்டில் இலங்கைச் சுப்பிரீங் கோட்டு வழக்கறிஞராக அவர் அனுமதிக்கப்பட்டதுடன் அப்போது கொழும்பில் பிரபல்யமடைந்திருந்த நியாயவாதிகள் சமாசமொன்றின் பங்காளியாகவுமிருந்தார். அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கொடுக்கப்படும் உணவு சம்பந்தமான பிரச்னையை ஆராய்ந்து ஆலோசனைகூற நியமிக்கப்பட்ட உத்தியோகப்பற்றற்ற கமிட்டியின் தலைவராக 1936 ம் ஆண்டில் அவர் தெரிந்தெடுக்கப்பட்டார். அதற்கு முன்பு அவர் பொதுஜன தர்மகர்த்தாவின் பகுதியின் வேலைக்கு ஆதாரமான உறுதிப் பதிவு முறையை விஸ்தரித்தலுக்கும் அந்த முறையைச் சீர்திருத்தற்கான சிபார்சுகளைச் செய்யவும் நியமிக்கப்பட்ட கமிட்டியின் அங்கத்தவராக இருந்தார்.

அவர் அவுஸ்திரேலியாவில் ஹைகமிஷனராக நியமிக்கப்படு முன்பு, ஓர் சமாதான நீதவானுகவும், கொழும்பு டிஸ்திறிக்கின் உத்தியோகப்பற்றற்ற நீதவானுகவும் இருந்தார். 1940 ம் ஆண்டு தொடக்கம் 1948 ம் ஆண்டு வரை சட்டக் கல்விச் சபை அங்கத்தவராகவும் செயலாற்றினுர். பாராளுமன்ற அங்கத்தவராக இவர் தெரிந்தெடுக்கப்பட்டபோது 1947 ம் ஆண்டில் கமிட்டிகளின் உபதலைவராக இவர் நியமிக்கப்பட்டார். 1952 ம் ஆண்டில் ஸி. பி. ஈ. பட்டமும் இவருக்குக் கிடைத்தது.

1953 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக்கம் அவுஸ்திரேலியாவில் இராஜ்யத் தூதுவர்களுள் சிரேஷ்டராகவும் இவர் இருந்துவருகிருர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P... O ROAD
NALLUR, JAFFNA
No..................

# அயல் நாட்டார் கண்ட அழகிய இலங்கை

(பதிப்புரிமை)

தேச சஞ்சாரிகள் தங்கள் குறிப்புப் புத்தகங்களில் இலங்கையைப் போல் வேறெந்தத் தீவையும் அடிக்கடி குறிப்பிடவில்லையென்றே சொல்ல வேண்டும். ஒவ்வொரு வருடமும் ஆயிரக் கணக்கான மக்கள் இத்தீவில் வந்திறங்குகின்றனர். இவர்கள் தாங்கள் இத்தீவில் கண்ட கண்கவர் வனப்புகளைப்பற்றியும், விசித்திரமான காட்சிகளைப்பற்றியும் ஒரே விதமான குறிப்புகளையே எழுதுகிறார்கள். ஆனால் இத்தேச சஞ்சாரிகள் போய்ப் பார்க்காத இத்தீவின் இதர இடங்கள் உலகிற்குப் பெரும்பாலும் ஒரு மர்மமாகவே இன்னும் இருந்து வருகிறது. அந்நிய நாட்டவர்களில் ஒரு சிலரே இந்நாட்டைப்பற்றி நன்கறிந்துகொண்டுள்ளார்கள். ஆனால் அதிலும் ஒரு சிலரே இந்நாட்டு மொழியில் பாண்டித்தியம் பெற முயற்சி யெடுத்துக்கொண்டுள்ளார்கள். இது இவ்வாறிருக்க இலங்கையர்கள் பிற மொழிகளை அதிக விருப்பமுடன் கற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல், தாங்கள் தொடர்புவைத்துக்கொள்ள வேண்டியிருந்த அந்நிய நாட்டவர்கள் பலருக்கும் நல்ல வசதிகளையும் அளித்துள்ளார்கள். எனவே இலங்கை வெளியுலகத்துக்கு எப்பொழுதும் ஒரு மர்மமாகவே இருந்துவந்திருப்பதிலும், இதன் கரையோரங்களில் வந்திறங்கிவிட்டுச் சென்ற பல்வேறு மக்களாலும் பலவிதமான பெயர்கள் இதற்கு வழங்கப்பட்டிருப்பதிலும் வியப்பொன்றுமில்லை.

புராதன காலந்தொட்டு தேசசஞ்சாரிகளின் குறிப்புப் புத்தகங்களில் இலங்கையைப்பற்றிய நீண்ட வர்ணனைகள் அசாதாரணமான விதத்தில் நமது கவனத்தை ஈர்ப்பனவாதவிருப்பதால் அவற்றைக் குறிப்பிடாமல் இலங்கையைப்பற்றிய எந்த சரித்திர பூகோள சாஸ்திரமும் சம்பூரணமடையாது. இதனை வாசிப்பவர், விசேஷமாக அவர் ஒரு இலங்கைவாசியாக விருப்பின் இது சந்தேகமின்றி அவருக்கு அதிக களிப்பையுண்டு பண்ணும். இக்குறிப்புக்கள் மூலம் நாம் பல விஷயங்களை அறிந்துகொள்ளலாம். நூலாசிரியர்களது பண்பாடு இவற்றின் வாயிலாகப் புலப்படும். எவ்வித கண்கொண்டு பலரும் ஒரே நாட்டைக் காண்கின்றனர் என்பதும், ஒரு விஷயத்தை மிகைப்படுத்திக் கூறும் தன்மை தேச சஞ்சாரிகளில் எல்லாச் சாதியினருக்கும் எல்லா வயதினருக்கும் பொதுவாகவுள்ளது என்பதும் விளங்குகின்றன. மேலும் விசித்திரப் பொருட்களையும் விநோத பழங்கலைப் பொருட்களையும் தேடியலையும் தேசசஞ்சாரிகள் கூறுபவனவற்றைக்கேட்டு, தங்கள் பொழுதுபோக்கிற்கு உகந்த நகைச்சுவை விளைக்கும் கதைகளாக அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள இந்நாட்டு மக்களுக்கிருந்த தடுக்கவொண்ணாத தாகத்தையும் இக்குறிப்புகளில் நாம் காண்கின்றோம். இவற்றிற்கிடையின் ,இலங்கைச் சரித்திரத்தின் பல்வேறு காலங்களில், இத்தீவு, எவ்வாறிருந்ததென்பதை எங்களுக்கு எடுத்துக் காட்டும் அடிப்படையான உண்மையும் இருக்கத்தான் செய்கிறது. வட இந்தியாவில் கி. மு. 321 ல் பெரிய சாம்ராச்சியத்தை நிறுவியவன் சந்திரகுப்த மௌரியன். இவன்தான் முதன் முதலாகச் சக்கரவர்த்தியாக வட இந்தியாவை ஆண்டு வந்தான். இவனுக்கும் செலுகஸ் எனும் கிரேக்க அரசனுக்கும் நட்பு ஏற்பட்டு நெடுங்காலம் நீடித்து இருந்தது. சந்திரகுப்தனின் தலைநகராகிய பாடலிபுரத்தில் அரசவையில் மெகஸ்தனிஸ் எனும் கிரேக்கத் தூதுவன் இருந்துவந்தான். அவன் சந்திரகுப்தனின் மகதராச்சியத்தில் தான் கண்ட காட்சிகளையெல்லாம் விரிவாக எழுதிவைத்தான். அவன் இந்தியாவின் அயலிலுள்ள (தாப்ரபானே) தாமிரபரணித் தீவைப்பற்றியும் சிறு குறிப்பு எழுதியுள்ளான் : அது பின்வருமாறு :—

1. தாபரபானே இந்தியாவிலிருந்து ஒரு நதியினால் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் வசிப்பவர்கள் பாலயகொனி (மக்கிறின்டல் இப்பதத்தை பாளி-ஜனங்கள், அதாவது புனித தர்மத்தை அனுஷ்டிக்கும் மக்கள் என விளக்குகிறார். இவ்விளக்கம் திருப்திகரமாக இல்லை), என்றழைக்கப்படுகிறார்கள். மேலும் இவர்களின் நாட்டில் இந்தியாவில் காணப்படுவதைவிட அதிகமான தங்கமும் பெரிய முத்துக்களும் இருக்கின்றன. தாப்ரபானேக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒரு நதி ஓடுகின்றது. தாப்ரபானேயின் ஒரு பிரிவில் இந்தியாவில் காணப்படுவதைவிடப் பெரிய யானைகளும் வன விலங்குகளும் சஞ்சரிக்கின்றன. மற்றப் பிரிவில் மனிதர் வாழ்கின்றனர்.
2. கிறிஸ்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த சொலினஸ் பொலிஹிஸ்டர் என்னும் உரோமன் எழுதிய விளக்கம் கீழே தரப்படுகின்றது. இது 1587 ல் ஆர்த்தர் கோல்டிங் என்னும் ஆங்கிலேயன் ஒருவனால் இலத்தீனிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

"நாடுகளைத் தேடி கடல்களில் அலைந்துகொண்டிருந்த மனிதன் உண்மையை நன்கறியும் வரை, தாமிரபரணி பிறிதொரு உலக மென்றும் அதில் அன்டிசோன்ஸ் என்றழைக்கப்படுபவர்கள் வாழ்ந்தார்களென்றும் மக்கள் நம்பிவந்தார்கள். ஆனால் அலெக்ஸாந்தரின் வீரதீரச் செயல்கள் இவ்வறியாமையை நிலைத்து நிற்க இடமளிக்கவில்லை. இவ்வீரன், கண்டுபிடிக்கப்படாத தேசங்களிலும் தன் புகழைப் பரவச்செய்தான்.

இந்நாட்டைத் தேடிப்பிடித்த மாசிடோனிய கடற்படையின் தளகர்த்தன் ஒனிஸிகிறிட்டஸ் என்பவன் இது எவ்வளவு பெரியது ? இங்கு வளரும் தாவரங்களும் உயிரினங்களும் யாவை ? இது எத்திசையிலுள்ளது ? என்பவற்றை நாங்கள் அறியக் கூடியதாகச் செய்தான். இத்தீவு ஏழாயிரம் பர்லாங்கு நீளமும் ஐயாயிரம் பர்லாங்கு அகலமும் உடையது. இதனை ஒரு நதி இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றது. இவற்றில் ஒரு பிரிவில் இந்தியாவில் உள்ள யானைகளைவிடப் பெரிய யானைகளும் மிருகங்களும் சஞ்சரிக்கின்றன. மற்றப் பிரிவில் மனிதர் வசிக்கின்றனர். இது கிழக்குக்கும் மேற்குக்குமிடையே அமையப் பெற்றிருக்கிறது. இது கிழக்குக் கடலில் ஆரம்பித்து இந்தியாவுக்கும் அப்பால் வியாபித்திருக்கிறது. இந்தியாவிலுள்ள ஒரு சாகித்தியவரான பார்லிகளின் நாட்டிலிருந்து அங்கு செல்வதற்கு இருபது நாட்கள் கப்பலில் பிரயாணஞ் செய்யவேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் மூங்கிலால் செய்யப்பெற்ற கட்டுமரங்களிலும் படகுகளிலுமே பிரயாணஞ் செய்தார்கள். இப்பொழுது எங்கள் கப்பல்களில் இப்பிரயாணத்தை ஏழு நாட்களில் செய்யமுடிகிறது. இவற்றிற்கும் இந்தியாவுக்கும் இடையில் ஆறு பாகங்களுக்குமேல் ஆழமில்லாத ஒரு கடல் உண்டு. எனினும் சில இடங்களில் நங்கூரம் பாய்ச்சமுடியாத அளவிற்கு ஆழமுண்டு. இக்கடலில் பிரயாணம் செய்வதற்கு நட்சத்திரங்களின் உதவி கிடைப்பதில்லை. ஏனெனில் அங்கு ஸப்தரிஷி

(22 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலி இராசன் நாடகம்

திரு. மு. இராமலிங்கம்

### சங்கிலி இராசன் நாடகம்

"பழைய காலத்தில் நடைபெற்ற உண்மைச் சரித்திரங்களை நம்மவர் வாசிப்பதினாலும் கேட்பதினாலும் அதிக பயனடைவர் என்பதும் அவ்வகைச் சரித்திரங்களை வசன நடையாய் இயற்ற விழில் கூறுவதிலும் யாவர்க்கும் விளங்க இன்பம் பயக்கும் நாடக வழக்கில் கூறுவதும் அதைப் பிரத்தியட்சமாய்க் கண்டு அச்சரித்திர சம்பவங்களை என்றும் மறவாது இலேசாய் மனதில் பதியத்தக்கதாய் நடித்துக் காட்டுவதும் சர்க்கரையைத் தேனுடனும் கருப்பஞ்சாற்றுடனும் கலந்தூட்டியதை ஒக்கும்" என்பது காலஞ்சென்ற **அச்சுவேலி ச. தம்பிமுத்துப்பிள்ளையவர்களின்** கொள்கையாகும். இக் கொள்கையை நனடமுறையில் கொண்டு வர வேண்டும் என்னும் ஆவலுடன் யாழ்ப்பாணத்திலே திசையெங்கும் இசைபரப்பி அரசியற்றிய சிங்கையாரிய குலத்தை முடிப்பதற்குப் பிறந்து அரசுரிமையை அநியாயமாய்க் கவர்ந்து பற்பல கொடுமைகளைச் செய்து ஈற்றில் தான் விதைத்ததையே அறுத்த பான்மையாய்க் கொல்லப்பட்ட சங்கிலியரசன் கதையை யாவர்க்கும் இன்பமும் நல்லறிவும் உண்டாக்கும் நோக்கமாய் இயற்றி அச்சிற் பதித்து வெளியிட்டார்.

யாழ்ப்பாணப் புராதன சரித்திரத்தையும் ஓர் ஆசிரியப்பாவி லியற்றி இந் நாடகத்துடன் சேர்த்திருக்கின்ருர். இந்நாடகத்தின் பிரதியொன்றினை எமக்கு இரவலாகக் கொடுத்துதவிய நண்பர் **வெள்ளவத்தை குல. சபாநாதன்** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

பாடல் மாதிரிக்காக இந்நாடகத்தில் சோழ அரசன் சொல் விருத்தத்தை ஈண்டெடுத்துக்காட்டுதும்.

**எலியது கொழுத்துப் பாம்பை**
**எட்டியே கொஞ்சப் போன**
**கலியுகக் கதை போல் நீயும்**
**கர்வமா யெதிர்த்து வந்தாய்**
**புலி பசித்திட்ட போதும்**
**புல்லினைத் தின்னு மோடா**
**வலிமையைப் பார்ப்போம் போர்க்கு**
**வாடா நிர்மூடா கேடா**

### ஈழச் சரித்திர சம்பந்தமான நாடகங்கள்

சேர, சோழ, பாண்டிய நாட்டுச் சரித்திர சம்பந்தமான நாடகங்கள் பலவுள. ஆனல் ஈழ நாட்டுச் சரித்திர சம்பந்தமான நாடகங்கள் ஆக நான்கே உள. அவற்றுள் யாழ்ப்பாணச் சரித்திர சம்பந்தமுடையன இரண்டு. அவையாவன :—

1. பூதத்தம்பி விலாசம்
2. சங்கிலி இராசன் நாடகம்

இலங்கைச் சரித்திரசம்பந்தமான நாடகங்கள் இரண்டு. அவை யாவன :—

1. கண்டி இராசன் நாடகம்
2. அசோகமாலா (வசன நாடகம்)

### நாடகாசிரியர்கள் ஆதரிக்கும் நாடகசபைகள்

சங்கிலி இராசன் நாடகத்தை இயற்றி வெளியிட்டதோடமையாது அக்காலத்தில் அதாவது 1908 ம் ஆண்டளவில் அச்சுவேலியில் நாடகக் கலையாக்கங் கருதி உழைத்ததுவும் திரு. தம்பிமுத்துப் பிள்ளையைத் தாமே காரியஸ்தராகக் கொண்டது மான **"அதி விநோத அலங்கார சபா"** எனப் பெயரிய நாடக சபையாரைக் கொண்டு நடிப்பித்தும் அதனை அரங்கேற்றினரென இந்நாடகத்தில் மிளிரும் முகவுரையாலும் வந்தனப் பாக்களாலும் தெரியவருகின்றது. இந் நாடகாசிரியர் இயற்றிய நாடகங்களை அவ்வப்போது நடித்து அரங்கேற்றி இவருக்கு ஆர்வத்தையும் உற்சாகத்தையும் ஊட்டிய நாடக சபைகள்தான் இவர் எட்டு நாடகங்களை இயற்றக் காரண கர்த்தாக்களாயிருந்தார்களெனக் கூறவும் வேண்டுமா ? இது அக்காலத்துச் சம்பிரதாயம் போலும்.

### இவ்வாசிரியரின் இதர நாடகங்கள்

இந்நாடகாசிரியரின் (1) சந்தியோகுமையோர் சகாயசபா (2) அலசு சரித்திர சபா (3) யோசேப்பு டிறுமா (4) தூமரத நாடகப் பிரதிகள் கிடைத்தில. தூமரத நாடகத்திலிருந்து ஒரு விருத்தத்தை ஈண்டெடுத்துக் காட்டுதும்.

### கலித்துறை

**அந்த முலவுசெ ராதர் ஹெளலொக்**
**கெனுமண்ணலினல்**
**வந்த கொமிஷனரான புகழ்செறி**
**மன்னவரே**
**எந்தப்படியுங் கொழும்புடனெம்மை**
**பிணைத்திடுவீர்**
**இந்தத் தருணமிழக்கில் வரா**
**திங்கிது நிசமே**

**யோசேப்பு நாடகத்திலிருந்தும் யோசேப்பு புலம்பல் விருத்தத்தை ஈண்டெடுத்துக் காட்டுதும்.**

**ஆலைவாய்க் கரும்பதானேன் அர**
**வின் வாய்த் தேரையானேன்**
**காலையுட்பட்ட யானைக் கன்றெ**
**னப் புலம்பலானேன்**
**மேலை வானவனுக்கே ராவிதனைக்**
**கடக்க வெந்த**
**மூலையிலொதுங்குவேனே முதல்**
**வனே யருள் செய்வாயே**

### தருமபுத்திர நாடகமும் இராம நாடகமும் அச்சேறல்

கொழும்பு மேக்கன்றையில் வங்குச் (Mercantile Bank) சிறுப்பராயிருந்த ஸ்ரீமான் சி. மயிலுப்பிள்ளை முதலியாரின் கேள்விப்படி அவர் மாமனர் ஸ்ரீமான் அருணுசல முதலியார் குமாரன் **சுவாமிநாத முதலியாரால்** ஒவ்வொரு விருத்தத்திற்கும் ஒவ்வொரு பழமொழி வைத்து அழகாயியற்றப் பெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்த "தருமபுத்திர நாடகத்தை" அக்காலம் ஆடுவோர் பாடுவோருள் ஒருவராயிருந்த சண்டிருப்பாய் ஸ்ரீமான் க. முருகேசு உபாத்தியாயரினதும் நீர்வேலி ஸ்ரீமான் ச. வீரசிங்க உடையாரதும் ஞாபகத்திலிருந்தபடி கேட்டுப் பிரதி செய்தும் பிழைகளைத் திருத்தியும் இராக தாளங்களமைத்தும் இரண்டாம் பதிப்பாக வெளிப்படுத்தினர். சிறுப்பரவர்கள் திரு. தம்பிமுத்துப்பிள்ளைக்குக் கொழும்பில் ஒரு பெரிய விருந்தளித்து அவரைக் கனப்படுத்தினர். பின்பு மேற்கூறிய சுவாமி நாத முதலியாராலியற்றப் பெற்ற இராம நாடகத்தையும் சிறுப்பரின் கேள்விப்படி அவ்வாறே பிழை திருத்தி அச்சிட்டு வெளியிட்டார். இதுவும் இரண்டாம் பதிப்புப் போலும்.

### இந்திரகுமார நாடகம் அச்சேறல்

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நீதவான் **உவைமன் கதிரைவேற்பிள்ளைத்** துரையின் அருமைத் தந்தையாரான **குமாரசுவாமி முதலியாரின்** இந்திர குமார நாடகம் அச்சுவேலியாரால் நடிக்கப்பெற்றுப் பிரதியில்லாது அழிந்து போயிருந்த போது துரையவர்கள் கேள்விப்படி கூடியவரையில் வாய்ப்பாடமாயிருந்தோரிடம் கேட்டெழுதி மிகுதியையுந் தாமாக இயற்றி இரண்டாம் பதிப்பாக அச்சிட்டு உபகரித்தார். பின்பு ஊர்காவற்றுறையார் அந்த நாடகத்தை ஆடியபோது புதிய தருக்கள் வைத்துத் தரும்படி திரு. தம்பிமுத்துப்பிள்ளையிடம் கேட்டு வைத்துக் கொண்டார்கள்.

### திருத்திப் பிரசுரித்த இதர நாடகங்கள்

இன்னும் திரு. தம்பிமுத்துப்பிள்ளையவர்கள் திருத்திப்பிரசுரித்த நாடகங்கள் பல. அவற்றுள் தெரிந்தவைகளின் பெயர்களை இங்கு தருகிறேம்.

1. அராலி முத்துக் குமாரப் புலவர் இயற்றிய **தேவசகாயம் பிள்ளை நாடகம்.**
2. சம்பத்திரிசியார் கல்லூரி உபாத்தியாயர் பி. சுபவாக்கியம் பிள்ளையவர்களியற்றிய **தேவசகாயம்பிள்ளை விசித்திரசபா.**
3. யாழ்ப்பாணம் S. G. பொன்னையாபிள்ளை இயற்றிய **சவினகன்னிசபா.**
4. மாதகல் அ. பா. தம்பிமுத்துப் புலவர் இயற்றிய **பிலோமினு கன்னி டிராமா.**
5. சிறுவிளான் வ. சந்தியாகுப்பிள்ளை உபாத்தியாயர் இயற்றிய **வரப்பிரகாசன் நாடகம்.**
6. கெங்காவரம்தெத்தெனும் பதியில் வசித்த ச. லோகநாதன் உபாத்தியாயர் இயற்றிய **கொலிபரத்து நாடகம்.**
7. மங்க நல்லூர் செபஸ்தியானு உபத்தியாயர் இயற்றிய **ஆட்டுவணிகன் நாடகம்.**
8. வேதநாயகசாஸ்திரியார் இயற்றிய **ஞானத்தச்சன் நாடகம்.**

இந்நாடகாசிரியர் இயற்றிப் பிரசுரித்த இதர நூல்கள் நாற்பதுக்கு மேல். இவர் தேடியெடுத்துத் திருத்திப் பிரசுரித்த அரியபழைய நூல்களோ ஐம்பதுக்குமேலாகும். அவற்றின் விபரங்களை இவரது சரித்திர சூசனத்தில் காண்க. இக்கட்டுரைக்கும் இந்நாடகாசிரியரைப்பற்றிய இதற்குமுந்திய இரு கட்டுரைகளுக்கும் சில குறிப்புகளைத் தந்து உதவிய கொழும்பு அரசினர் அச்சியந்திரசாலையில் கடமைபுரியும் இவரது அருமை மகனுர் **ஹென்றி T. தம்பி முத்துப்பிள்ளையவர்களுக்கும்** என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

## அயல் நாட்டார் கண்ட அழகிய இலங்கை

(20ம் பக்கத் தொடர்ச்சி)

நக்ஷத்திரகணமாவது கிருத்திகா நக்ஷத்திரமாவது எந்நேரத்திலும் தென்படுவதில்லை. எட்டாவது நாளிலிருந்து பதினறுவது நாள்வரை தான் அவர்கள் அங்கு சந்திரனைக் காண்கிருர்கள். "கனேப்பஸ்" என்னும் ஒரு பிரகாசமான பெரிய நட்சத்திரம் அங்கு பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இங்கு சூரியன் வலது பக்கத்தில் உதயமாகி இடது பக்கத்தில் அஸ்தமிக்கின்றுன். எனவே கப்பல் பிரயாணிகள் ஒரு குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர அவர்களுக்குத் திசையை அறிவிப்பதற்கு எவ்விதத் துணையுமில்லாதிருப்பதால் அவர்கள் நாட்டை நோக்கிப் பறக்கும் பறவைகள் செல்லும் திக்கைப் பின்பற்றுகிருர்கள். . . . . .

"அவர்கள் (அதாவது அத்தீவில் வாழும் மக்கள்), சிப்பிகளிலிருந்து விலையுயர்ந்த பலரக முத்துக்களைப் பெறுகிருர்கள். இச்சிப்பிகள் ஒரு காலத்தில் பனிநீரைப் பெறுவதற்காக வாயைத் திறந்து கொண்டு ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. எனவே, சந்திர கிரணங்களிலிருந்து கிடைக்கும் நீரை இவை உறிஞ்சிக் கொள்கின்றன. இதுவே முத்தாக மாறுகின்றது.

"சிப்பிகளும் முத்துக்களைப் பேணிப் பாதுகாக்கின்றன. எப்படியெனில் பகல் நேரத்தில் சூரிய வெப்பம் அதிகமாக விருக்கும்போது அவ்வெப்பத்திஞல் முத்துக்கள் மங்கிவிடாதிருக்கும் பொருட்டு சிப்பிகள் ஆழத்தில் போய் பதுங்கிக் கொள்கின்றன. மீன்பிடிப்பவர்கள் விஷயத்திலும் இச்சிப்பிகள் அதிக கவனமாக நடந்துகொள்கின்றன. இது எவ்வாறெனில் இவை பகல் நேரத்தில் பெரும் பகுதியைக் கற்பாறைகளுக்கிடையில் அல்லது சுருமீன்களுக்கிடையில் பதுங்கிக்கொண்டே கழிக்கின்றன. இவை கூட்டம் கூட்டமாக நீந்திச் செல்கின்றன. இக்கூட்டத்துக்கு ஒரு சிப்பி தலைமை தாங்குகின்றது. தலைமை வகிக்கும் சிப்பி பிடிபட்டுவிட்டால் தப்பித்துக்கொண்ட சிப்பிகளும் அவ்வலைக்குள் வந்து சேருகின்றன." (தொடரும்)

## பள்ளிவாசல்துறை கிராம முன்னேற்றச் சங்கம், கற்பிட்டி

பள்ளிவாசல் துறை கி. மு. சங்கம், கற்பிட்டிப் பகுதியில் ஓர் மத்திய ஸ்தாபனமாக கருதப்பட்டு வருகின்றது. சென்ற மாதம் 17.2.54 ம் திகதி கி.மு.ச. இலாகா அதிபர் திரு. தயாரத்தின, பிரிவுக்காரியாதிகாரி, கி. மு. ச. அதிகாரி ஆகியோர் கிராமத்தை சுற்றிப் பார்வையிடும்பொழுது கிராமவாசிகள் தங்கள் சுய முயற்சியாலும், அரசாங்க உதவியாலும் கட்டிய மலசலகூடங்களையும், கிணறுகளையும், வளவுத் தோட்டங்களையும் பார்வையிட்டார்கள்.

மொய்யதீன் பிச்சை எனும் ஓர் கிராமவாசி தான் கட்டிய கிணற்றின் பெரும் உதவியால் தனது வளவுத் தோட்டத்தில் வெட்டின கோழிக்குட்டு வாழைக்குலையை கி.மு.ச. அதிபருக்கு காட்டினர்.

பின்பு சேகலாப்டீன் மரைக்கார் சங்கப் பாவிப்புக்கு நன்கொடையாகக் கொடுத்த விசாலமான காரியாலயத்தையும் பார்வையிட்டு அதிபர் சந்தோஷப்பட்டார்.

இச்சங்கம் அரசாங்கம் கொடுத்த இரண்டு எக்கர் காணியை சுயமுயற்சியால் வெட்டிச் சுத்தமாக்கி முன்மாதிரியான முந்திரித் தோட்டத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இன்னும் பல அரும் பெரும் தொண்டுகளை இச்சங்கம் கிராமவாசிகளின் முன்னேற்றத்திற்காகச் செய்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. அருணாசலம் சபாபதி

## 1854-1924

## தேசத் தொண்டனின் நூற்றாண்டு ஞாபக விழா

(அம்பலவாணன்)

எவ்வித ஆடம்பரமுமின்றி தேசத் தொண்டும் சமயத்தொண்டும் ஏறக்குறைய 35 ஆண்டுகள் வரை புரிந்து அமைதியான வாழ்க்கை நடத்திய திரு. அருணாசலம் சபாபதி அவர்களின் நூற்றாண்டு ஞாபகார்த்த தினத்தைக் கொண்டாட யாழ்ப்பாண மக்கள் தீர்மானித்தமை பாராட்டத்தக்கதொரு விஷயமாகும். திரு. சபாபதி அவர்கள் யாழ்ப்பாணத்திலே தலைசிறந்த மலையாளப் புகையிலை வர்த்தகராக விளங்கினார். எனினும் அவர் தமது ஓய்வு நேரத்தைச் சமயத் தொண்டிலும் பொது நலத் தொண்டிலும் பயன்படுத்திவந்தார்.

திரு. சபாபதி அவர்கள் டிஸ்திறிக் ரோட்டுக் கமிட்டி அங்கத்தவராகவும், லோக்கல் போட் அங்கத்தவராகவும், பல வருடங்களாகக் கடமையாற்றி வந்தார். யாழ்ப்பாணத்திலே அரசாங்க ஆஸ்பத்திரி நிறுவப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாண ஆபத்துக்குதவிச் சங்கமே ஓர் ஆஸ்பத்திரியை நடத்திவந்தது. இச் சங்கத்தின் பாலனச் சபை அங்கத்தவர்களுள் ஒருவராகத் திரு. சபாபதி பல காலமாகக் கடமையாற்றினார். 1906 ல் அச்சங்கம் நடாத்திய ஆஸ்பத்திரியை அரசாங்கத்திடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டபோது, அதனைக் கையளித்தற்குரிய நிபந்தனைகளை முடிவு செய்தற்காக அச்சங்கம் அனுப்பிய தூதுக்குழுவில் ஒருவராகத் திரு. சபாபதி அவர்களும் சென்று இலங்கைத் தேசாதிபதி சேர். ஹென்றி பிளேக் அவர்களைப் பேட்டி கண்டுளார். மிருக நிட்டூரத் தடுப்புச் சங்கத்தின் பிரதிநிதியாக ஏழாண்டு வரை கடமையாற்றினார். யாழ்ப்பாணச் சங்கம் நிறுவப்பட்ட காலம் தொடக்கம் ஏழாண்டுவரை அதன் காரியதரிசியாகவும் பின்னர் அச்சங்கத்தின் உபதலைவராகவும் தொண்டாற்றினார். திரு. சபாபதி யாழ்ப்பாணத்தில் பிரபல்ய வர்த்தகராக விளங்கி யாழ்ப்பாண வர்த்தக சமாசத்தின் தலைவராகப் பல வருடங்கள் கடமைபுரிந்தார். யாழ்ப்பாணத்துக்கு அதிக வருவாயைக் கொடுத்து வந்தது மலையாளப் புகையிலை வியாபாரமாகும். திருவாங்கூருக்கு அனுப்புவதற்கேற்ற புகையிலை யாழ்ப்பாணத்தில் செய்கை பண்ணப்பட்டு வருடந்தோறும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இதில் திரு. சபாபதி அவர்களும் ஈடுபட்டிருந்தார்கள். திருவாங்கூர் அரசாங்கம் யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதியாகும் புகையிலைக்குக் கூடிய வரி விதித்தபோதெல்லாம், அதனைக் குறைப்பதற்காக இலங்கையரசாங்கம் நடவடிக்கை யெடுக்கவேண்டுமெனத் தூண்டிவந்த தன் பயனாக, புகையிலை வரி குறைக்கப்பட்டது. இதற்காக அவர் பலமுறை இலங்கைத் தேசாதிபதியிடம் யாழ்ப்பாண மக்கள் படும் கஷ்டங்களையெல்லாம் எடுத்துக் காட்டி வந்தார்.

யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதப் பாதை அமைப்பதற்காகப் பாடுபட்டவர்களுள் திரு. சபாபதி அவர்களும் ஒருவராவர். யாழ்ப்பாணத்துக்கு இலங்கைத் தேசாதிபதிகள் விஜயஞ்செய்தபோதெல்லாம் திரு. சபாபதி வரவேற்புக் கமிட்டியில் ஒருவராக இருப்பார். இவரே பெரும்பாலும் வரவேற்புப் பத்திரங்களை எழுதிக் கொடுத்தார். யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யும் இலங்கைத் தேசாதிபதிகள் முன்னிலையில் யாழ்ப்பாண மக்கள் எவ்வித முறையீடுகளையாவது சமர்ப்பிக்கத் தூதுக் குழுவொன்றைத் தெரிந்தெடுத்தால், அதில் திரு. சபாபதி ஓர் அங்கத்தவராகவேயிருப்பார். இவ்வாறு பல தூதுகோஷ்டிகளில் அங்கத்தவராகக் கடமையாற்றினார்.

### சமயத் தொண்டு

மேற்கூறிய பொதுநலத் தொண்டுகளைவிட அவர் தமது சமயத்துக்காகச் செய்த தொண்டு அளவிடற்கரியது. யாழ்ப்பாணத்திலே சைவபரிபாலன சபை ஆரம்பித்த காலம் தொடக்கம் அதன் அங்கத்தவராயும், 1891 ம் ஆண்டு மாசி மாதம் தொடக்கம் "Hindu Organ" பத்திரிகையின் இணைப் பத்திராசிரியராயும், 1913 ம் ஆண்டு ஆடி மாதம் முதல் இறக்கும்வரை கௌரவ பத்திராசிரியராயும், 1908 ம் ஆண்டு ஆவணி மாதம் முதல் இந்துக் கல்லூரி அதிகார சபையின் காரியதரிசியாயும், 1914 ம் ஆண்டு ஆடி மாதம் முதல் ஆயுள் பரியந்தம் அக் கல்லூரியின் மனேசராகவும் கடமையாற்றியுள்ளார்.

இந்துக்களுக்கென ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டுமென்று முயன்றவர்களுள் திரு. சபாபதி அவர்களும் ஒருவராவர். "Hindu Organ" பத்திரிகை 1889 ல் ஆரம்பிக்கப் பெற்றது. அப்பொழுது திருவாங்கூர் பிரதம நீதியரசர் திரு. த. செல்லப்பாபிள்ளை அவர்களே பத்திராதிபராகக் கடமையாற்றினார். 1891 ல் திரு. அ. கதிரவேலு அவர்களும் திரு. சபாபதி அவர்களும் இணைப் பத்திராசிரியர்களாகக் கடமையாற்றினார்கள். சிறிது காலத்தின் பின் திரு. காசிப்பிள்ளை அவர்கள் இப்பதவியைப் விட்டுவிட, திரு. சபாபதி அவர்களே 1891 ம் ஆண்டு தொடக்கம் மரணபரியந்தம் பத்திராசிரியராகத் தொண்டாற்றினார். இவர் பத்திராசிரியராக விருந்த காலத்தில் இப்பத்திரிகையை இந்து மக்கள் பெரிதும் விரும்பிப் படித்துவந்த காரணத்தால் 1899 ல் அது ஒரு வார வெளியீடாகிப் பின்னர் 1913 ல் வாரத்துக்கிருமுறை வெளியிடப்படும் பத்திரிகையாக அபிவிருத்தியடைந்தது.

### இந்து சாதன வெள்ளி விழா

1915 ல் இந்து சாதனப் பத்திரிகையின் வெள்ளி விழா அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஒரு செம்புச் சல்லியாவது வேதனமாகப் பெறுமல், இப்பத்திரிகையின் கௌரவ பத்திராசிரியராக திரு. சபாபதி ஆற்றிய அருந் தொண்டினைப் பாராட்டு முகமாக, வெள்ளிவிழாவின்போது **ஒரு தங்கக் கடிகாரத்தையும் சங்கிலியையும்** பரிசாக அளித்தது. **திரு. சபாபதி அவர்கள் சம்பளம் பெறுது 34 வருடங்களாக கௌரவ பத்திராசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.** இலங்கையிலே என் அகிலவுலகிலும் இவ்வித அருந் தொண்டாற்றியவர் வேறெவருமில்லையெனத் துணிந்து கூறலாம். பொதுவாக இலங்கைத் தமிழ்ச் சமூகத்துக்காகவும் சிறப்பாக இந்து சமூகத்துக்காகவும் தமது அறிவாற்றலையும் அரிய காலத்தையும் தியாகஞ் செய்தார்.

### இந்துக் கல்லூரி

வண்ணார்பண்ணையில் ஓர் இந்து ஆங்கில கலாசாலையை அத்வக்காத்து திரு. எஸ். நாகலிங்கம் அவர்கள் நிறுவுவதற்குப் பக்கப்பலமாக நின்று தோள்கொடுத்தவர்கள் திரு. வி. காசிப்பிள்ளை, திரு. சி. த. மு. பசுபதிச் செட்டியார், திரு. அ. சபாபதி ஆகிய திரிமூர்த்திகளாவர். இந்த ஆங்கில கலாசாலையே இப்பொழுது இந்துக் கல்லூரியாக மிளிர்கின்றது. இந்து சாதனப் பத்திராதிபராகவும் இந்துக் கல்லூரி மனேசராகவும்

(25ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமங்களில் கூட்டு வாழ்க்கை

"குருபரன்"

மனிதர்கள் ஆதிகாலந்தொட்டே கூட்டு வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறார்கள். தனி மனிதனுகச் சீவிப்பதால் ஏற்படும் கஷ்டங்களைக்கண்டு, சேர்ந்து சீவிக்கத் தொடங்கினர். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதற்கிணங்க அவர்கள் தங்களின் பாதுகாப்புக்கருதியே, கூட்டமாகச் சேர்ந்து சீவனம் நடாத்தத் தொடங்கினர். ஒருவர்க்கொரு கஷ்டமேற்பட்டால் எல்லோரும் போய் உதவி செய்து அவனை அதனின்றும் விடுவிப்பர். இப்படி ஒருவர்க்கொருவர் உதவியாக ஒரு சமூகமாகச் சீவித்தனர் ஆதிகால மக்கள்.

அந்த முறையானது நாளடைவில் பெரியதாகிக்கொண்டு வந்து மேல் நாட்டார் நாகரீகம் தலை காட்டியதும் சில இடங்களில் இல்லாமல்போய் விட்டது. எங்களுக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. அதனுல் வேறு எதுவிதத்துணையும் எதிர்ப்பார்க்க வேண்டிய அவசியமில்லையென்று தனித்துச் சீவனம் நடாத்தத் தொடங்குவார்களும் தற்காலத்திய சமூகத்தில் இருக்கின்றனர். அந்தக் காலத்திலே விஞ்ஞான வளர்ச்சி இல்லை. மேலதிக வசதிகளில்லை. அதனுல் ஒருவரிடமில்லாத பொருள் ஒன்றுக்கு இன்னெருவரைத் துணை நாடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அது நாள்டைவில் பெரும்பாலும் மறைந்தொழிந்தது.

என்றுலும், தற்காலத்தில் சிற்சில இடங்களில் மக்கள் பண்டைய கூட்டு வாழ்க்கை முறையினை என்றும் அனுஷ்டித்து வருகின்றனர். அதனுல் அவர்கள் போதிய பலனனுபவிக்கின்றனர். இந்தக் கூட்டுறவு முறை இன்றும் மிகவும் அதிகமாகக் காணப்படுமிடங்கள் கிராமப் புறங்களே. அதிலும் தனித்தன்மை பெற்றவை மட்டக்களப்புக் கிராமப்புறங்கள். அந்தக் கூட்டுறவு முறைகளே இங்கே குறிப்பிடப்படுவனவாகும்.

தற்காலத்தில் சகல மக்களாலும் போற்றப்படும் சர்வதேச கூட்டுறவு இயக்கத்தைச் சார்ந்தவையல்ல இவர்களது முறைகள். அரசினரும் அதிகம் சிரத்தை எடுத்து அம்முறையை மேலோங்கச் செய்வதற்காக உழைக்கின்றனர். அம்முறையை வளர்க்க உழைப்பது ஒவ்வொருவரதும் கடமை.

கிராமங்களில் காணப்படும் கூட்டுறவு முறையினைக் கூர்ந்து நோக்கினுல், அதில் அங்கம் வகிப்பவர்களும் அவர்களே. அதை நடாத்துபவர்களுமவர்களே. ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால் அதில் பலபல சாதிகள் இருக்கலாம்; அல்லது ஒரே சாதியாக இருக்கலாம். அவர்களில் ஒருவருடைய சந்ததியில் உற்பத்தியாகிவந்தவர்கள் எல்லோரும் ஒரு தனிக் குழுவாக அல்லது வகுத்துவார் என்றழைக்கப்படுபவர்களாக இருப்பர். வகுத்துவார் என்றழைக்கப்படும் சொல், ஒருவருடைய வயிற்றில் பிறந்த பிள்ளைகளிலிருந்து உண்டான எல்லோரும் எனப்பொருள்படும். அவர்களிலே தற்செயலாக ஒருவருக்குத் திடீரென ஓர் ஆபத்து ஏற்பட்டால், அவர்களுடன் சுற்றவர உள்ள எல்லோரும் போய் உதவிசெய்து தப்புவிப்பது இவர்களிடத்துள்ள ஓர் உயர்ந்த குணமாகும். அப்படி உதவிசெய்ய மறுத்தோர், அல்லது வராது விட்டோர், அந்தக் குழுவினரால் புறக்கணிக்கப்பட்டவர்களாகும். இப்படி எல்லோர்க்கும் வராதொழிந்தால், அவர் சமூகத்திலே ஒரு தனித்த பெயர் வழி. அப்படிப்பட்டவருக்காவது தற்சமயம் ஏதும் அபாயங்கள் என்றுல், சூழ உள்ளவர்கள் எப்படி வெறுப்புடையவர்களாக இருப்பினும், அந்தச் சமயத்தில் ஓடிப்போய் உதவி செய்வார்கள். அந்த அகன்ற மனப்பான்மை ஒவ்வொருவரிடத்திலும் உண்டு.

ஒருவருக்கு ஏதாவது வயலில் விதைத்தல், வீட்டுக்கு ஓலை வேய்தல், வயல் வெட்டல், கிணறுகள் தோண்டல், முதலிய பெருத்த வேலையானுல், எல்லோரும் கூடி அவ்வேலையை முடிப்பர். இப்படி ஒருவர், ஒருவர்க்குதவி செய்தால் அவருக்கு மற்றவர். இப்படியாக ஒருவர்க்கொருவர் உதவி செய்வர். ஆனுல் வயலில் வேலை செய்தல் கொஞ்சம் கஷ்டமானதாக இருந்ததால், கூலி கொடுக்கும் வழக்கம் உண்டானது.

ஒருவர்க்கு ஒரு கிணறு வெட்டுவதாக இருந்தால், அவர் ஒவ்வொருவரிடமும் ஒரு முறை அறிவித்தால் போதுமானது. குறித்த நேரத்திற்கு எல்லோரும் வந்து கூடிவிடுவார்கள். எல்லோரும் சந்தோஷமாக அந்த வேலையை முடிப்பர். வேலை செய்விப்பவர்களால் ஒரு விருந்து அந்த வேலை முடிவில் நடத்தப்படும். அதில் எல்லோரும் பங்கு பற்றி, கூடிக்குலாவிச் சந்தோஷமாகச் சாப்பிட்டுச் செல்வார்கள். இப்படி மற்றவருடைய வேலைக்கும் இவர் போகவேண்டும். இல்லாவிடின் அன்னாரது உதவியை இழந்து விடுவார். இப்படியே குறிப்பிடத்தக்க வேலைகளெல்லாம் பெரும்பாலும் கிராமப் புறங்களில் நடைபெற்று வருகின்றன. அவர்கள் அந்த நேரத்தில் மிகுந்த சந்தோஷமுடையவர்களாகக் காணப்படுவார்கள்.

இப்படி விவாகச் சடங்கு முதலிய வைபவங்கள் யாவும் நடத்துவதற்குக் கூலியாட்களை அழைக்க வேண்டியதில்லை. உற்றுர் உறவினர் எல்லோருமாகக் கூடி அதை நடத்துவார்கள்.

ஆண்கள் மட்டுமல்ல பெண்களுமப்படியே. வீட்டு வேலை சம்பந்தமாக ஏதும் பெரிய வேலைகள் இருப்பின் சூழவுள்ள எல்லாப் பெண்களும் கூடிஉதவி செய்வர். ஒரு விருந்திற்குச் சமையல் செய்வதானுல், பட்டினப் பகுதிகளில் கூடிய ஆட்கள் கூலிக்குப் பிடிக்க வேண்டி ஏற்படும். ஆனுல் கிராமப் புறங்களில் அங்ஙனம் ஏதும் விருந்து, கல்யாணச் சடங்குகள் நடைபெற்றுல், அவ்விடத்துக்குச் சமையல் செய்வதற்கும் குறைந்தது பத்துப்பேர் மட்டில் கூடிவிடுவார்கள். அவர்கள் நலன் கருதி வருபவர்களல்ல. அவர்களையெல்லாம் அவர்களிடையேயுள்ள ஐக்கியம்தான் அங்ஙனம் வருவிக்கிறது.

மேலும் இக்கிராமாந்தர மக்கள் தங்களிடையே பலபல இயக்கங்களையும் உண்டாக்கிக் கொள்கின்றனர். அந்த இயக்கங்கட்கு அவர்களிடையே தலைவர் முதலானவர்களை வைத்துக் கொள்வார்கள். அவர்களின் மேற்பார்வையிலேதான் அவ்வியக்கம் நடைபெறும். வயல்களிலே இருந்து கொண்டுவரும் நெல்லைத் தங்கள் உணவுக்கு வேண்டியவை போக, மீதியை விற்றும், இன்னுமொரு பாகத்தைச் சேமித்து வைப்பதற்கு இவர்களிடையே ஒரு சங்கத்தையும் உண்டாக்கிக் கொள்கின்றனர். இது இவர்களால் சீட்டுக் கட்டுதல், என அழைக்கப்படும். நெல் போட்டுவைக்கும் சங்கத்தைக் "கொம்பெனி" என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பர். பணத்தைச் சேமித்து வைப்பதற்கே சீட்டு என்று சொல்லப்படும். தங்களிடத்திலே வரும் மிகுதியான பணத்தைச் சேமிப்பதற்கு இது ஓர் உயர்ந்த மார்க்கமாக இவர்களால் கருதப்படுகிறது. தங்களிடையே எவருக்காவது நிதி தட்டுப்பட்டால், அச்சங்கத்திலிருந்து பெற்றுக்கொள்வர். பின் அப்பணம் அவர்களால் வட்டியோடு கட்டப்படும். தங்கள் குறித்த கால முடிவில் அப்பணத்தைப் பிரித்துக் கொள்வர்.

நெல்லையுமப்படியே தங்கட்குத் தேவையிருந்தால் எடுத்துக் கொள்வர். பின் வாசி என்றழைக்கப்படும் வட்டியுடன் அது திருப்பிக் கொடுக்கப்படும். வாசியென அழைத்தல் ஓர் விசேட முறையாக இருந்து வருகிறது. இதனுல் கடன் எடுப்பவர்க்கு நட்டமும், கொடுப்பவர்கட்கு லாபமுமாக இருக்கிறது. ஒருமுறையில் இரு அவண நெல் கடனுக எடுக்கப்பட்டால் ஒரு போக வேளாண்மை செய்து முடிவில் அல்லது மூன்று மாத முடிவில், இரண்டு அவண நெல்லுக்கு ஆதாயமாக இன்னெரு அவணம் சேர்த்து மூன்று அவண நெல் கொடுக்கவேண்டும். இது அரைவாசி எனப்படும். (¼) கால்வாசி என்பது காலம் குறைவாக இருந்தால் கொடுத்த தொகையில் (¼) காற்பங்கை ஆதாயமாக முதலுடன் வைத்துக் கொடுக்க வேண்டும். காலம் கிட்டத்தட்ட ஒரு வருடமாகி விட்டால் இரட்டிப் பங்கு கொடுக்க வேண்டும். இது ஒன்றுக்கு இரண்டு ஆகும்.

இந்த முறையால் நெல்லுள்ளவர்கள் கூடிய வருவாயைப் பெறுகின்றனர். கிராம மக்கள் வாழ்க்கையிலே ஒரு விசேட அம்சமாக இருப்பது இந்தக் கூட்டு வாழ்க்கை. எந்தவகையிலாவது அடைய முடியாத சந்தோஷத்தையும் குதூகலத்தையும் இந்தக் கூட்டு வாழ்க்கையிலே காண்கின்றனர்.

ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பதும் ஒருவர் கஷ்டப்பட்டால் அதில் எல்லோரும் சென்று பங்கெடுப்பதும் ஆபத்துக்களில், உதவுவதும், மனிதர்களின் உயர்ந்த பண்புகளில் அங்கம் வகித்தவை. அத்தகைய உயர்ந்த பண்புகள் நம் கிராமப் புறங்களிலே காணப்படுகின்றன.

மேல் நாட்டு நாகரீகம் மிகுதியாக எல்லா இடங்களிலும், நுழையத் தொடங்கியதால், மக்கள் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. ஒவ்வொருவரும் சிறப்பாக உடுக்கவும், உண்ணவும், வேறு பல வழிகளிலும் தங்கள் தங்கள் சீவியத்தை நடாத்தவும், பழகிக் கொண்டால் போதும். எங்கட்கு வேண்டிய பொருட்களெல்லாம் உண்டாக்கப்படுகின்றன. காசு இருந்தால் கொடுத்து வாங்கிச் சாப்பிடுவோம். இல்லாவிட்டால் சும்மா இருப்போம் என்னும் மனப்பான்மை சிரிடத்திலே உதிக்கத் தொடங்கியதால், கூட்டு வாழ்க்கைமுறை கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கிவிட்டது.

மேல்நாட்டிலே தோன்றி உலகமெங்கணும் பரவிய கூட்டுறவு இயக்கம் உலக மக்கட்குச் சொல்லற்கரிய தன்மைகளை உண்டு பண்ணுகிறதென்று நாம் கூறலாம். ஆனல் கிராம மக்கட்கு அவர்களின் கூட்டுவாழ்க்கையே கூடிய பலனை விளைவிப்பதாக அவர்கள் கருதுகிறுர்கள்.

சிற்சில கிராம மக்களிடையே இருந்து வரும் இன்னெரு உயர்ந்த பண்பு தங்களுக்குள்ளே நியாயம் தீர்த்தல். ஒரு சந்ததியில் உற்பவித்தவர்கட்கு அவர்களில் அறிவில் கூடிய ஒருவர் தலைவராகக் கருதப்படுவர். அவரின் அதிகாரத்தின் கீழ் அந்தச் சந்ததியாரின் வாழ்க்கை நடந்து கொண்டு வரும். இவருக்குக் கீழ் உள்ள எவராவது தங்களுக்குள்ளே சண்டை போட்டுக்கொண்டால், அல்லது ஏதும் குற்றங்கள் செய்தால், அத்தலைவரே எல்லோர் சமூகத்திலும் விசாரணை செய்து சமாதானப்படுத்துவார் அல்லது தீர்ப்புக் கூறுவார். அரசினரால் அவன் குற்றவாளியாகப் பிடிக்கப்படுமுன்னரே தீர்ப்பளிக்கப்பட்டு விடும். இந்தக் குற்றவாளிகளில் எவராவது அவர்களுடைய கட்டளைகட்கு அமைந்து நடக்காவிட்டால் அப்பால் அவர் சமூகத்தினின்றும் புறக்கணிக்கப்பட்டுப் பலத்த குற்றவாளியாகவும், அரசினரால் பிடிக்கப்படுவார். ஒரு முக்கியமான விடயத்திற்கு அந்தத் தலைவருடைய கட்டளையை எல்லோரும் கேட்டு நடப்பார்கள். இதிலே அவர்களுடைய கூட்டு வாழ்க்கை முறையினைக் காணலாம். ஒருவர் ஏதாவது ஒரு முக்கிய விடயம் செய்யவேண்டுமானுல், அல்லது விவாகச்சடங்கு போன்ற ஏதும் சடங்குகள் நடத்த வேண்டுமானுல், முதலில் இனத்தவர்கள் முதலானவர்களிடத்திலும் கலந்து ஆலோசிக்க வேண்டும். அங்ஙனம் ஆலோசியாதொழியின் அவர்களால் நன்மதிப்பிழந்தவராக அச் சம்பவம் நடத்துபவர் கருதப்படுவார். அதுமட்டுமல்லாமல் அவர்களது உதவியையும் அவர் இழந்து விடுவார். இனபந்துக்கள் என்னும் பாசமே இவர்களுடைய கூட்டு வாழ்க்கையைச் செவ்வனே நடத்திவைக்கிறது.

நாகரீகமற்ற நாட்டுப்புறச் சனங்கள் என்று கருதப்படுபவர்களே இத்தகைய உயர்ந்த பண்பு இலட்சியங்களை உடையவர்களாக இருக்கிறுர்கள் என்பதில் கொஞ்சமேனும் தவறில்லை.

---

## திரு. அருணுசலம் சபாபதி

(23ம் பக்கத் தொடர்ச்சி)

விளங்கிய திரு. சபாபதி அவர்கள் யாழ்ப்பாணத் தலைவர் வரிசையில் முக்கிய இடம் பெற்றுர். இப்பெரியார் சைவபரிபாலன சபைக்கும் இந்து சாதனப் பத்திரிகைக்கும் இந்துக் கல்லூரிக்கும் ஆற்றிய பேருதவிகளைத் திரு. சி. த. மு. பசுபதிச் செட்டியார் பாராட்டி எழுதி திரு. அ. சபாபதி பெயராலும் ஒரு பரிசு தாம் இந்துக் கல்லூரிக் களித்த கிட்டங்கியின் வாடகைப் பணத்திலிருந்து வருஷந்தோறும் கொடுபட்டுவருமாறு ஒழுங்கு செய்தார்.

### சட்ட நிரூபண சபைப் பிரதிநிதி

இவ்வாறு தமிழ்ச் சமூகத்திற்குத் தொண்டாற்றிய திரு. சபாபதி அவர்கள் சட்ட நிரூபண சபையில் தமிழ்ப் பிரதிநிதியாகவும் **1917** ம் ஆண்டு தை மாதம் முதல் **1920** ம் ஆண்டு மார்கழி மாதம்வரை இருந்து அருந் தொண்டாற்றினுர். இவர் சமாதான நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். இங்ஙனம் தமிழருக்கும் சைவமக்களுக்கும் அருந் தொண்டாற்றிய திரு. அ. சபாபதி அவர்கள் **1924** ம் ஆண்டு மே மாதம் **6** ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை தமது எழுபதாம் வயதில் தேகவியோகமாயினர்.

இப்பெரியாரின் தேகவியோகத்தைக் கேட்டவுடன் இலங்கைத் தேசாதிபதியும், சேர். பொன். இராமநாதன் முதலான சட்டசபை அங்கத்தவர்கள் அநேகரும் தங்கள் அநுதாபத்தைத் தந்திமூலம் தெரிவித்தனர். பத்திரிகைகளும் இவர் ஆற்றிய சேவைகளை எடுத்துக்காட்டி பாராட்டித் தம் அநுதாபத்தைத் தெரிவித்தன. சைவபரிபாலன சபையினரும் திரு. சபாபதி அவர்களின் தேகவியோகத்தைக் குறித்து வருந்தி, தங்கள் அநுதாபத்தை அவரின் மனைவி மக்களுக்குத் தெரிவித்தனர். யாழ்ப்பாண அன்னையீன்ற தலைவர்கள் வரிசையில் திரு. சபாபதி அவர்களும் அழியா இடம் பெற்றுவிட்டார்கள். ஆடம்பரமின்றி அருந் தொண்டாற்ற முடியும் என்பதற்குச் சான்றுகத் திரு. சபாபதி அவர்களின் வாழ்க்கை தமிழ் மக்களுக்கு வழிகாட்டி நிற்கும் என நம்புகிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி தலதா மாளிகை

(15 ம் பக்கத் தொடர்ச்சி)

"மகாவாகல்கடை" எனச் சிங்களத்தில் அழைக்கப்படும் அரண்மனையின் தலை வாயில் அகழியின் மேலமைந்த பாலத்தின் மேல் கட்டப்பட்டிருக்கின்றது. பாதையருகே தோரண வாசற் படிகளின் முன் சந்திர வட்டக்கல் லொன்று காணப்படுகின்றது. வாயிலின் இரு மருங்கிலும் கல்லிற் செதுக்கப்பட்டிருக்கும் இரு யானை உருவங்கள் எமக்கு கண்டிக் கலையை ஞாபகமூட்டுகின்றன. யானைகள் புட்பமாரி பொழிய நிற்கும் இலக்குமியின் உருவமைந்த பலகைக்கல்லொன்று, வாசலின் எதிரே கோவிற் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருக்கின்றது. இது எங்கிருந்து கொண்டுவரப்பட்டதெனத் தெரியவில்லை. தோரண வாசல், கோயிற் கதவுக்கு எதிராக அமையவில்லை. உட்புறத்தில் கோயிற் சுவருக்கருகே படிகளிருக்கின்றன. இரண்டாம் படிகள் நம்மை கோயிற் கதவருகிலுள்ள சந்திரவட்டக்கல்லுக்குக் கொண்டு செல்கின்றன. கதவின் இருபுறத்திலும் அழகிய சித்திரவேலைப் பாடுகளும், இரு துவார பாலகர்களும் இருப்பதைக் காணலாம். இதன்மேல் " மகர தோரண " முறை தோற்றுகின்றது. விருந்தை வழி சுரங்கத்தைப் போன்றமைந்திருக்கின்றது. இதனைக் கடந்ததும் பறையறை மண்டபத்தை அடையலாம். இம்மண்டபத்தின் வட கோடியில் பார்த்திருப்பு மண்டபத்திற்குச் செல்லும் படிகள் உண்டு. தற்போது பார்த்திருப்பு மண்டபத்தின் மேல்மாடி கீழ் நாட்டு நூலகமாகவும் கீழ்மாடி நூலக அதிபரின் அலுவலகமாகவும் திகழ்கின்றன. டொய்லி என்பார் " கடைசிக் கண்டி அரசன் இம்மண்டபத்திலிருந்து காட்டு யானைகளைப் பிடிக்கும் முறையைக் கவனித்தான் " எனக் குறிப்பிடுகின்றார்.

பார்த்திருப்பு மண்டபத்திற்குச் செல்லும் வாயிலின் இடது கைப் புறத்தில் ஒரு கண்ணடிப் பெட்டியில் புத்த உருவங்களும், அரசமர மாதிரிகளும், வெள்ளியிலமைந்த பூக்களும் வைக்கப் பட்டிருக்கின்றன.

பார்த்திருப்பு மண்டபத்திற்குச் செல்லாது வலதுபுறமாகச் செல்லும் படிகளிலேறிச் சென்றால் விருந்தை வழிக்குமேலே கட்டப்பட்டிருக்கும் அறையை அடையலாம். இவ்வறைக் கதவின் இருமருங்கிலும் மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெண்மை நிறந் தீட்டிய சிங்கங்களும், காவல் வீரர்களின் உருவங்களும் காட்சியளிக்கின்றன.

புத்தரின் பரிசுத்த பல்லை இலங்கையிலிருந்து அரசு செலுத்திய பௌத்த மன்னர்கள் தங்களின் வெற்றிச் சின்னமாக உபயோகித்தனர். இப்புனித தந்தத்தை உடையவனே அரசனாக வரிக்கப்பட்டான். இத்தியாதி சிறப்புகளுடன் திகழ்ந்த, திகழ்கின்ற இப்புனித தந்தம் இந்தியாவில் எவ்வெவ்விடங்களில் அடக்கஞ் செய்யப்பட்டனவெனவும், இதனைப் பாதுகாக்க போர் முனை புகுந்து உயிர்த்தியாகஞ் செய்த மன்னர்களின் வரலாறுகளும், இலங்கைக்கு இப்புனிதப் பல்லைப்பெற அரசர்கள் செய்த போர்களும் அடங்கிய விபரமான நூலொன்று பாலி மொழியிலும், சிங்களத்திலும் எழுதப்பட்டிருக்கின்றது. இது " தாது வம்சம் " எனப்படும். இந்நூலிற் தரப்படும் தந்தவரலாற்றை ஈண்டுச் சுருக்கமாகத் தருகிறோம்.

அனுராதபுரியில் கீர்த்தி ஸ்ரீ மேவன் இருந்து அரசு செலுத்திய காலத்தில், இந்தியாவிலிருந்த குகசேவனென்னும் இளவல் புத்தரின் புனிதத் தந்தத்தை ஜைனர்களிடமிருந்து காப்பாற்


(30 ம் பக்கம் பார்க்க)

சந்திரவட்டக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT ... ROAD
NALLUR, ...
No.........





நாளுக்கு நாள் அதிக
தெளிவான,
எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனாவிலுள்ள கேடில் இந்த
அற்புத வேலையைச் செய்யட்டும்

தினமும் ரெக்ஸோனா சோப் உபயோகியுங்கள். இதன் கேடில் கலந்த நுரை உங்கள் சருமத்தை நாளுக்கு நாள் அதிக மிருதுவாகவும், தெளிவாகவும் இருக்கச் செய்யும்.






ரெக்ஸோனா
கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 114-X30 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள இலக்கியச் சரித்திரம் (6)

# குத்தில காவியம்

“ மணி ”

முன்னொரு காலத்தில் பெரும் புகழ்வாய்ந்த பிரமதத்தன் என்னும் அரசன் வாரணாசிபுரத்தைப் பரிபாலித்து வந்தான். இம்மன்னன் கருணையும் அறிவும் ஒருங்கேயமையப்பெற்ற குணசீலனாயிருந்தான். இவன் காலத்திலே சங்கீத வித்துவான்கள் தோன்றும் மரபிலே போதிசத்துவர் அவதரித்தார். இவருக்கு குத்திலர் என நாமகரணஞ் சூட்டப்பட்டது. குத்திலரின் தாய்தந்தையரிருவரும் குருடர்களாயிருந்தமையால் சிறுவயதிலேயே தந்தை தாயாரைப் பராமரிக்கும் பொறுப்பெற்றார். குத்திலர் சங்கீத சாகரத்தில் மூழ்கித் திளைத்து பெரிய சங்கீத வித்துவானாயினார். இவரது சங்கீதத் திறமையை அறிந்த அரசன் தனதரசவையிலே குத்திலருக்கு வேலை கொடுத்தான். இவர் இவ்விதமாகக் கடமையேற்று தாய்தந்தையரைப் பேணி வரும் காலத்திலே, உஜ்ஜயினி நகரில் ஒரு பெரிய விழா நடைபெற்றது. வாரணாசி நகரிலிருந்து உஜ்ஜயினிக்கு சில வியாபாரிகள் வியாபார நோக்கமாகச் சென்றிருந்தனர். அந்நகரில் நடந்த விழாவைக் கண்டுகளித்துக் கொண்டிருக்கும் வேளையிலே, அவர்கள் மூசிலன் என்ற சங்கீத வித்துவானொருவனைச் சந்தித்தனர். மூசிலன் அந்நகரின் சிறந்த சங்கீத வித்துவானாவன். இவன் தனது சங்கீதத் திறமையை இவ்வியாபாரிகளுக்குக் காட்டி அவர்களிடமிருந்து சன்மானம் பெற நினைத்தான். உடனே வீணையை எடுத்து மீட்டினான். பலமணிநேரம் தான் வீணையில் கற்றவித்தைகளை யெல்லாம் காட்டி வீணையை மீட்டியும் வியாபாரிகள் அதனை ரசிக்கவில்லை. இதுகண்ட மூசிலன் சொல்லொணாக் கோபம் கொண்டான். சங்கீதத்தை ரசிக்க முடியாத முழு மூடர்களோவென நினைத்து தனது வீணை வாசிப்பு எப்படியிருந்ததெனக் கேட்க, வியாபாரிகள் சிரித்து மூசிலன் இதுவரை வீணைக்குச் சுருதி கூட்டுவதாக நினைத்துக் கொண்டிருந்ததாகவும், மூசிலன் உண்மையில் வீணையை மீட்டியிருந்தால் அது அவனது திறமைக்குறைவையே காட்டுகின்றதெனவும் கூறினர். அதோடு, வீணை வாசிப்புக் கேட்கவேண்டுமானால் வாரணாசியிலுள்ள குத்திலரிடம் போகவேண்டுமெனவும் கூறினர். மேலும் குத்திலரின் திறமையைப்பற்றி வானளாவப் புகழ்ந்தனர்.

இதுகேட்ட மூசிலன் எவ்விதமேனும் குத்திலரிடம் சென்று சங்கீதம் கற்க விரும்பினான். உடனே வாரணாசி நகரடைந்து, குத்திலரின் இல்லம் நாடி, குத்திலரின் குருட்டுத் தாய்தந்தயரைச் சந்தோஷத்திலாழ்த்த விரும்பி வீணையை மீட்டினான். பாவம் ! குத்திலரின் பெற்றோர் வீணைச் சத்தம் காதில் புகுந்ததும் சூ, சூ வெனச் சத்தமிட்டனர். மூசிலன் வெட்கி வீணை வாசிப்பதை நிறுத்திவிட்டு அவர்களிடம் சென்று வணங்கி அவர்கள் விரட்டுவதென்னவெனக் கேட்டான். விஷயமறியாத குத்திலரின் பெற்றார் மகனின் வீணையை எலி அறுக்கும் சத்தம் கேட்டதாக மொழிந்தனர். மூசிலன் உடன் தன் நிலையையும், குத்திலரின் சங்கீத ஞானத்தையும் ஒருவாறு உணர்ந்துகொண்டு குத்திலரிடம் பாடம் கேட்க அவர் வரும் வரை காத்திருந்தான். குத்திலர் அரசவையிலிருந்து வந்ததும் மூசிலன் அவரை வணங்கி தன் கருத்தைக் கூறினான். குத்திலர் மூசிலனைப் பார்த்த மாத்திரத்திலேயே அவன் மாணாக்கர்களுக்குரிய இலட்சணமற்றிருப்பதுகண்டு அவன் வேண்டுகோளை மறுத்தார்.

தான் கொண்ட கருத்தில் வெற்றிகாணத்துடித்த மூசிலன் குத்திலரின் குருட்டுத் தாய்தந்தையரிடம் சென்று அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளை மிகவும் பயபக்தியுடன் செய்து அவர்கள் மனம் கவர்ந்தான். பின்னர் குருட்டுத் தாய்தந்தையரைக் கொண்டு குத்திலரிடம் சங்கீதம் கற்க எற்பாடு செய்தான். குத்திலர் பெற்றாரின் சொல்லைத் தடுக்கமுடியாது மூசிலனுக்குச் சங்கீதம் கற்பித்தார்; தனக்குத் தெரிந்த எல்லா உருப்படிகளையும், சாகித்தியங்களையும், இராகங்களையும் படிப்பித்தார். மூசிலன் சிறிது காலத்திற்குள் வீணைக்கலையில் சிறந்து விளங்கினான். குத்திலரைப் போன்ற வித்வத்வமடைந்ததும் அரசனிடம் சென்று தானும் சங்கீத வித்துவானாகையால் தனக்கும் குத்திலருக்கு கொடுக்கும் வேதனம் தருமாறு விண்ணப்பித்தான். பிரமதத்த மன்னன் அவன் வேண்டுகோளை மறுக்கவே, மூசிலன் தனது திறமையைக் காட்டத் தனக்குச் சந்தர்ப்பமளிக்குமாறு வேண்டினான். அரசன் மூசிலனின் திறமையை எவ்விதம் நிர்ணயிக்கலாமெனக் கேட்க, நன்றிகெட்ட மூசிலன், சிறிதேனும் குருபக்தியின்றி குத்திலரோடு வீணைப் போட்டிக்குத் தயாராயிருப்பதாகவும், குத்திலரை போட்டியில் வெல்லமுடியுமென்றும் கூறினான். அரசன் உடன் குத்திலரை வரவழைத்து மூசிலனின் கருத்தை வெளியிட்டான். குத்திலர், வளர்த்த கடா மார்பில்பாய்ந்தமாதிரி தன் சீடனே தன்னோடு போட்டி போடத்துணிந்து விட்டதைக் கேட்டு மனங்குலைந்தார். குருமுஷ்டியாக ஒரு சங்கீத நுட்பத்தையாவது வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் மூசிலனுக்கு ஒளிக்காது சொல்லிக் கொடுத்த குத்திலர் மூசிலனோடு போட்டியிடத் தயாராகி அரசனிடம் எழு நாட்கள் கெடுகேட்டார். அரசனும் அவர் கேட்டுக் கொண்டபடி எழு நாட்கள் தவணை கொடுத்தான்.

அரசனின் உத்தரவு பெற்று மீண்ட குத்திலர் வீட்டிற்குப் போக மனமின்றி சீடனோடு போட்டியிடுவதிலும் பார்க்க நாட்டைவிட்டுச் செல்வது நல்லதெனத் துணிந்து காட்டிற்குச் சென்றார். காட்டில் பைத்தியம் பிடித்தவரைப் போல் அங்குமிங்கும் அலைந்தார். சிலசமயங்களில் துக்கம் தாங்கமாட்டாது வாய்விட்டலறினார். தேவர்களின் - உதவி கோரிப் பிரலாபித்தார். கொடிய வனவிலங்குகள் வாழும் மனித சஞ்சாரமற்ற காட்டிலே தன்னந்தனியே நின்று பிரலாபிக்கும் குத்திலரைக் கண்டு மனமிரங்கிய இந்திரன் அவருக்கு உதவி செய்ய நினைந்து குத்திலர் முன் தோன்றி அவர் வருந்தக் காரணமென்னவெனக் கேட்டான். குத்திலர் நடந்தவற்றை யெல்லாம் ஒன்றுவிடாது கூறினார். இந்திரன் அவர்மேல் இரக்கம் கொண்டான். அவன் குத்திலரை நோக்கி, “ குத்தில, நான் மூன்று குலிகைகள் தருகிறேன். இவை மந்திரக் குலிகைகள். முதலில் வீணைத் தந்திகளை யெல்லாம் அறுத்துவிட்டு, வீணையை மீட்ட தேவகானம் கிளம்பும் வரத்தை உனக்குத் தருகிறேன். தேவகானம் எழும்பினதும் ஒவ்வொரு குலிகைகளாக மூன்று குலிகைகளையும் மேலே வீசு. குலிகைகளை வீசியதும், கந்தருவர், இன்னரர் துந்துபிமுழக்க தேவ அரம்பையர், தேவர்கள் புடைசூழ வந்து உன் எதிரில் நடம் புரிவர். பயப்படாதே. வீட்டிற்குப் போய் கெடுதினத்தன்று மூசிலனுடன் வீணைமீட்பாயாக. உனக்கு வெற்றி நிச்சயம் ” எனக் கூறி ஆசீர்வதித்து இந்தி

(30 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீக்கிரமே நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே
# வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்



"வாத்தியார் அம்மாள் என் சுத்தமான தோற்றத்தை புகழ்கிருள். என் தாய் என் பிராக்குகளை ஸன்லைட் சோப்பிஞல் பளிச்சென்று வெண்மையாக சலவை செய்வதுதான் இதற்குக் காரணம். ஸன்லைட் சோப்பின் செழிப்பான நுரை சீக்கிரமே சுலபமாக, அடித்துத்துவைக் காமலே அழுக்கை அகற்றுகிறது."



"என் வகுப்பில் நான்தான் அதிக சோபையுடன் விளங்குகிறேன். என் கலர் பிராக்கை ஸன்லைட் சோப் எவ்வளவு பிரகாசமாக சலவை செய்திருக்கிற தென்று பாருங்கள்! ஸன்லைட் சோப் துணிகளுக்கு யாதொரு கெடுதலும் விளைவிக்காததால் அவைகளை பலநாள் நீடித்திருக்கச் செய்கிறது என்று என் தாய் கூறுகிருள். இது மிகவும் கவனிக்கவேண்டிய விஷயம்."




## ஸன்லைட் சோப்

துணிகளைக்காப்பாற்றுகிறது, சிரமத்தைக்குறைக்கிறது, பணத்தை மிச்சப்படுத்துகிறது

S. 223-X54 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குத்தில காவியம்

(28 ம் பக்கத் தொடர்ச்சி)

ரன் மறைந்தான். குத்திலர் சந்தோஷம் தாண்டவமாட வீடு திரும்பினார். தவணை நாள் வந்தது. குத்திலர் ஒருபுறத்திலும், மூசிலன் இன்னொருபுறத்திலும் அரசனின் எதிரே அமர்ந்தனர். இந்தியாவிலேயே வீணைக்கலையிற் தலைசிறந்த குத்திலருடன், அவரது சீடன் போட்டியிடுவதைக் காண பல தேசங்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்திருந்தனர். வெற்றி யாருக்குக் கிடைக்குமோ வெனக் காணத்துடி துடித்துக் கொண்டிருந்த சனசமுத்திரத்தின் மத்தியிலே குத்திலரும், மூசிலனும் வீற்றிருந்து வீணைகளை மீட்டனர்.

மூசிலன், குத்திலரிடம் கற்ற வித்தைகளையெல்லாம் அப்பழுக்கற திறமையாக வாசித்தான். குத்திலர் முதலில் சர்வ சாதாரணமாக வாசிக்கத் தொடங்கி சபையினரை மெய்மறக்கச் செய்தார். சிறிது நேரத்தில் வீணைத்தந்திகளை ஒவ்வொன்றாக அறுத்துவிட்டு வீணை வாசித்தார். இந்திரனின் வரப்பயனால் தந்திகளை அறுக்கத் தொடங்கியதும் தேவகானம் தொனித்தது. மக்கள் தேவகானத்தில்லயித்து கல்லாய்ச் சமைந்தவர்போன்று, ஆடாது, அசையாது வீற்றிருக்க, பறந்து செல்லும் பட்சி ஜாலங்களெல்லாம் இசையின் வசப்பட்டு பறக்கச் சக்தியிழந்து விரித்த இறக்கைகளுடன் ஆகாயத்தில் நின்றன. மூசிலனும் குத்திலர் வீணைத் தந்திகளை அறுப்பது கண்டு தானும் தந்திகளை அறுக்க, வீணையிலிருந்து அபஸ்வரம் கிளம்பியது. குத்திலர் இத்துடன் நில்லாது மந்திரக் குலிகைகளை மேலே வீசினார். கந்தருவர், கின்னரர் முதலாம் தேவர்கள் வாத்தியங்கள் இயக்க தேவமாதர் நடனமாடினர். இதுகண்ட மக்கள் இதுவன்றோ வீணாகானம், இதுவன்றோ சங்கீதம் என ஆரவாரித்து குத்திலரிடம் போட்டிக்கு வந்தது குறித்து மனம் நொந்து மூசிலனை வாயில் வந்தவாறு வைதனர். அரசன் வெகுண்டு மூசிலனை அரசசபையிலிருந்து வெளியேற்றினான். கொதித்தெழுந்த மக்களின் கோபத்துக்குள்ளான மூசிலன் இலேசில் தப்பிவிடமுடியுமா என்ன ! மூசிலன் வெளியிலிறங்கியதும் பொது மக்கள் கம்பும், கல்லும் கொண்டு மூசிலனைத் தாக்கினார்கள். அடிபட்ட மூசிலன் சிறிது நேரத்தில் யமபுரமடைந்தான், வெற்றிக்கொடி நாட்டிய குத்திலர் அரச சன்மானங்கள் பெற்று வீடுதிரும்பினார். இந்திரன் குத்திலரை இந்திரலோகத்திற்கு தனது விருந்தாளியாக அழைத்துச்சென்று பெருமைப்படுத்தினான்.

குத்தில காவியம் என்னும் நூலில் காணப்படும் கதை மேலே தரப்பட்டிருக்கின்றது. இந்நூல் புத்தர் புத்த பதவியடையுமுன்னர் போதிசத்து நிலையிலிருக்கும் பொழுது ஒரு காலத்தில் சங்கீத வித்துவான்கள் மரபில் அவதரித்து குத்திலர் என்ற நாமத்துடன் செய்த திருவிளையாடல்களை விவரிக்கின்றது. இக்காவியம், குரு சீடனுக்கிடையே நடந்த போட்டியை செய்யுள் நடையில் வர்ணிக்கின்றது. இந்நூலை, ஜயவர்தன புரக் கோட்டையிலிருந்து ஆளும் பராக்கிரமபாகு அரசசெலுத்திய காலத்தில் புத்தகுருவான வெத்தேவைப் புலவர் பாடினார். இதில் 511 செய்யுட்களிருக்கின்றன. இப்புலவர் அக்காலத்தில் சிறந்த புலவராக விளங்கிய ஆறு மொழி வல்லுனரான ஸ்ரீராகுலப் புலவரின் மாணக்கரெனத் தெரிய வருகின்றது. கோட்டைக் காலத்தில் எழுதப்பட்ட நூல்களில் இதுவே முதலிடம் பெறுகின்றதென சிங்கள அறிஞர்கள் கருதுகின்றனர். வெத்தேவைப் புலவர் ஒரு மக்கட்கவிஞர். பாண்டித்தியமிருந்தும் பண்டித நடையில் நூலெழுதுவதை விரும்பாதவர். இந்நூலை எளிய நடையிலே எழுதி ஜனரஞ்சகக் கவி யெனப் புகழ் பெற்றுவிட்டார். உள்ளத்தை உள்ளபடி சொல்லும் திறமை இவருக்குண்டு. புலவர்கள் வழக்கமாக தங்களது திறமையைக் காட்ட காதற் கதைகளையே தேர்ந்தெடுப்பர். இவர் இத்தகைய கதைகளை விடுத்து குத்திலர் கதையைத் தேர்ந்தெடுத்து பிரேமகாவியத்தைவிடச் சிறந்த முறையில் எழுதி முடித்திருக்கிறார். அவரது திறமைக்கு இதுவே சிறந்த சாட்சி. இவர் நூலின் 90 செய்யுட்களை புத்த வர்ணனைக்குவிட்டிருக்கிறார். இவரது ஆழ்ந்த புத்த பக்தியை இது காட்டுகின்றது. சுருங்கக் கூறின் வெத்தேவைப் புலவர் சிங்களரின் பெருமைக்கும் கௌரவத்திற்கும் பாத்திரரான புலவரெனின் அது உயர்வு நவிற்சியாகாது.

---

## கண்டி தலதா மாளிகை

(26 ம் பக்கத் தொடர்ச்சி)

றும் நோக்கத்துடன் தனது மருகன் தந்தகுமாரனிடம் கையளித்து இலங்கைக்கு கொண்டு செல்லுமாறு பணித்தான். தந்தகுமாரன் புனிததந்தத்தை அநேக கஷ்டங்களை அனுபவித்தும் கைவிடாது கொணர்ந்து அனுராதபுரத்திலிருந்தகீர்த்தி ஸ்ரீமேவனிடம் கையளித்தான். அரசன் இதனை கி. மு. 3 ம் நூற்றாண்டில் வாழ்ந்த தேவநம்பியதீசன் எழுப்பிய " தர்ம சக்கரம் " என்ற கோயிலிலே அடக்கஞ் செய்தான். அத்துடன் இதனை வருடாவருடம் ஊர்வலமாக அபயகிரி விகாரைக்கு எடுத்துச் செல்லுமாறும் கட்டளையிட்டான். உபதீசன் (கி. பின் 370) காலத்தில் இலங்கையில் மழையின்றி பூமிவரண்டு பெரிய பஞ்சமேற்பட்டது. உடனே அரசன் புனித தந்தத்தை ஊர்வலமா எடுத்துச் சென்றான். ஊர்வலத்தின் பின்னர் நாடெங்கும் மழைபெய்து, பயிர் செழித்து பஞ்சம் நீங்கியது.

தாதுசேன மன்னன் (கி.பி. 463) தலதாமாளிகையைத் (அனுரதபுரி) திருத்திக்கட்டினான். இதன் பின்னர் தமிழர் படையெடுப்பின் காரணமாக சிங்கள இராஜதானி பொலன்னறுவைக்கு மாற்றப்பட்டது. இராஜதானி மாற்றப்பட்டதும் புத்தரின் புனிதத் தந்தமும் எடுத்துச் செல்லப்பட்டு பொலன்னறுவையில் அடக்கஞ் செய்யப்பட்டது. சோழ சக்கரவர்த்தி இராஜராஜன் (கி.பின் 1017) காலத்தில் இலங்கையின் பெரும் பகுதி தமிழர் ஆட்சிக்குட்பட்டது. இலங்கையின் தென் பகுதி மாத்திரம் சிங்களவரின் கையிலிருந்தமையால், புனித பல்லை இங்கு எடுத்துச் சென்று பத்திரப் படுத்தி பின்னர் முதலாம் விஜயபாகு வெற்றிக்கொடி நாட்டியதும் பொலன்னறுவைக்கு மீண்டும் கொண்டுவந்து அதிவிமரிசையாக அடக்கஞ் செய்தனர். பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்குப் பின்னர் மீண்டும் நாட்டில் கலகம் காரணமாக அமைதி குன்றியமையால் புனித பல்லை பொலன்னறுவையிலிருந்து எடுத்துச் சென்று ஒளித்து வைக்க நேரிட்டது. 3 ம் விஜயபாகு பட்டத்திற்கு வந்ததும் பெலிகலை (கேகாலை டிஸ்திறிக்கில்) க்கு புனிதபல் கொண்டுவரப்பட்டு அழகிய கோயிலிலே அடக்கஞ் செய்யப்பட்டது. பின்னரும் அமைதியின்மை காரணமாக புனிததந்தம் தம்பதேனிக்கும் குருநாகலைக்கும், மற்றும் இடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு, கடைசியில் இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன் காலத்தில் கண்டியில் தலதா மாளிகையில் அடக்கஞ் செய்யப்பட்டது. இவன் கண்டியில் 3 மூன்று மாடி கொண்ட அழகிய கோயிலொன்றை அமைத்து 25,000 வெள்ளித் துண்டுகளால் ஒரு பேழையைச் செய்து நவரத்தினங்கள் பதித்து அதில் புத்தரின் புனித தந்தத்தை வைத்தான். அன்றுமுதல் புனித தந்தம் கண்டி தலதா மாளிகையிலேயே இருந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெண்மையான, சுத்தமான
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரை
மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது . . ."
என்கிறர் நிருபா ராய்






நிருபா ராய் மேலும் கூறுவதாவது:
"சுத்தமான, வெண்மையான லக்ஸ் ட்டாய்லட் சோப் ஒன்றுதான் என் சருமத்தை நன்ருக சுத்தம் செய்கிறது. அதன் மிருதுவான நுரை சருமத்தின் துவாரங்களில் புகுந்து மேனியின் இயற்கை அழகை வெளிக்கொண்டு வந்து, ஒரு தனிப்பொலிவை அளிக்கிறது. இந்த சுத்தமான, வெண்மையான சோப் சருமத்திற்கு அளிக்கும் நறுமணத்தையும் நான் மிகவும் விரும்புகிறேன்."

". . . அதனல்தான் என் சருமத்தை எழிலோங்கச்செய்ய
லக்ஸ் டாய்லட் சோப்பைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்."

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 411-X52 TM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No..................

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | | விலை : தபாற் செலவுட்பட ரூ. | ச. |
|---|---|---|---|
| 1. | குடியேற்ற, வெளியேற்றக் கட்டுப்பாட்டு அதிகாரியின் 1951 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை .. | 0 | 20 |
| 2. | தேசிய சேமிப்பு இயக்கத் தலைவரின் நிர்வாக அறிக்கை 1952 ம் ஆண்டுக்குரியது .. .. | 0 | 60 |
| 3. | அரசாங்க அச்சக அதிபரின் 1952 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை .. .. .. | 0 | 30 |
| 4. | ரப்பர் கொமிஷனரின் 1952 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை .. .. .. | 0 | 15 |
| 5. | வனஜந்துப் பரிபாலனப் பகுதி அதிபரின் 1951 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை .. .. | 0 | 65 |
| 6. | தலதாபன அதிகாரகரின் 1951 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. .. | 1 | 20 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,

தபால் பெட்டி நிர். 500,

கொழும்பு, 1.

என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

*சமாச்சாரப் பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org